நமது
# தமிழ்மண்
ஆசிரியர் : தொல்.திருமாவளவன்
₹15
VOL:20 • ISSUE:223 • ஜனவரி 2026



# திராவிடம் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானதல்ல!

எழுச்சித்தமிழர்




மாவீரர் நாள் பொதுக் கூட்டம் | சென்னை

# இலங்கையில் கூட்டாட்சி முறையில் ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டுவர வேண்டும்!

## எழுச்சித்தமிழர் வலியுறுத்தல்

**சென்னை, ஆவடியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் 27.11.2025 அன்று நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் ஈகைச்சுடரேற்றி ஆற்றிய வீரவணக்க உரையின் சுருக்கம்:**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

ஈழ விடுதலைக் களத்தில் இன்னுயிர் நீத்த போராளிகள், மாவீரர்கள் அனைவருக்கும் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் எமது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம். நவம்பர் 27, மேதகு பிரபாகரன் அவர்களால் ‘மாவீரர் நாள்’ என அறிவிக்கப்பட்டு அவர் தலைமையில் தமிழீழத்தில் மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்படுவது நெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நேற்று (26.11.2025) அவருடைய பிறந்த நாள். இன்று மாவீரர் நாள். ஈழ மண்ணில் இன்றைக்கு எல்லா மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டு இதே நேரத்தில் மெழுகுவத்தி ஏற்றி அஞ்சலி செலுத்துகிறார்கள்; செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். உலக நாடுகள் முழுவதும் எங்கெல்லாம் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இந்த நாள் கடைப்பிடிக்கப் படுகிறது; வீரவணக்கம் செலுத்தப்படுகிறது.



### ஏன் இந்த நாளைத் தேர்வு செய்தார்?

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முதல் களப்பலியான சங்கர், தமிழகத் திற்கு வந்து சிகிச்சையெடுத்துப் பலனளிக் காமல் உயிரிழக்க நேர்ந்தது. அவர் காலமான நாள்தான் நவம்பர் 27. ஒவ்வொரு நாளும் களத்தில் போராளிகள் உயிரிழக்கிறார்கள். ஒவ்வொரு போராளிக்கும் அவரவர் நினைவு நாளில்தான் வீரவணக்கம் செலுத்தவேண்டுமென்றால் வருடத்தில் 365 நாளும் வீரவணக்கம் செலுத்தவேண்டிய நாட்களாகத்தான் இருக்கும். ஆகவேதான், தமிழீழத் தேசியத் தலைவர் அண்ணன் பிரபாகரன் அவர்கள், எவ்வளவு முக்கியமான தளபதிகள் இறந்தாலும் தன்னுடைய குடும்பத்தில் உள்ள யார் இறந்தாலும், புதியதாக படையில் சேர்ந்த போராளிகள் இறந்தாலும், அவர்கள் பெண் புலிகளாக இருந்தாலும், ஆண் புலிகளாக இருந்தாலும், கரும்புலிகளாக இருந்தாலும், வான் புலிகளாக இருந்தாலும், கடற்புலிகளாக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் நினைவுகூர்ந்திடும் ஒரு நாளாக முதன் முதலில் சங்கர் களப்பலியான நாளைத் தேர்வுசெய்து அந்த நாளில் அனைவருக்கும் வீரவணக்கம் செலுத்துவதில் ஒரு கடமையாக புலிகளும், ஈழத்தமிழர்களும் கடைப்பிடிக்குமாறு அறிவித்தார். அதன்படி அவர்களும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

### மாவீரர் துயிலும் இல்லங்கள்

சிங்களப் பௌத்தப் பேரினவாதிகளால், சிங்களக் காடையர்களால் அல்லது அவர்களுக்குத் துணைநின்ற இந்தியா உள்ளிட்ட பிறநாடுகளின் படையினரால் பலியான தோழர்கள் அனைவருக்கும் அங்கே மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவிடம் உண்டு. ஒரே இடத்தில் அவ்வளவு பேரையும் அடக்கம் செய்ய முடியாது. பலருடைய உடல்கள் கிடைக்காது. பலர் கடலில் மாண்டிருப்பார்கள்; சிலர் வானில் சிதறியிருப்பார்கள்; சிலர் தங்களுக்குத் தாங்களே உடலில் வெடிமருந்தைக் கட்டிக்கொண்டு எதிரியை நோக்கிப் பாய்ந்து உயிரிழந்திருப்பார்கள். அப்படி எத்தனை பேர் உயிரிழந்தாலும் அந்த யுத்தத்தைப் படம் பிடிக்கக்கூடிய வல்லுநர், இந்த யுத்தத்தை வீடியோவாகப் பதிவு செய்யக்கூடியவர், எதிரிகளின் படை முகாமுக்குள் நுழைந்து ஒற்றறிந்துவரும் பணிகளைச் செய்யக்கூடிய போராளிகள், ரகசிய ஒற்றர்களாகச் சென்று பகை வரிடத்தில் சிக்கி உயிரிழக்கக் கூடியவர்கள்; இப்படிப்பட்ட அத்தனை பேரின் பட்டியலையும் மிகவும் பொறுப்பாகத் தயாரித்து, அவ்வளவு பேருக்கும் வெவ்வேறு துயிலும் இல்லங்களை ஆங்காங்கே நிறுவி, நினைவிடங்களை எழுப்பி அவர்களின் பெயர், தந்தை அல்லது அவருடைய குடும்பத்தில் உள்ள யாராவது ஒருவரின் பெயர், அவர் எந்தப் பகுதியைச் சார்ந்தயைச் சார்ந்த போராளி, எந்தப் படையைச் சார்ந்த போராளி என்பதையெல்லாம் கல்வெட்டில் பதிவு செய்து வரிசையாக ஆயிரக்கணக்கான வீரர்களின் நினைவிடங்கள் பொறிக்கப் பட்டு மாவீரர் துயிலும் இல்லமாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. 'கிளிநொச்சி', 'விசுவமேடு', 'கோப்பாய்' என்று இந்த மூன்று இடங்களிலும் மாவீரர் துயிலும் இல்லங்களில் நான் அஞ் சலி செலுத்தியிருக்கிறேன். இதுபோல எத்தனை இடங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் இருக்கின்றனவோ அந்த மாவீரர் துயிலும் இல்லம்தான் அவருடைய தலைமையிலான அந்தப் போராளிகளின் அடக்கத்தலத்தை 'மாவீரர் துயிலும் இல்லம்' என்று ஏக்கர் கணக்கில் இடம் சீர்செய்து, அவர்களுக்கான நினைவு இல்லங்களை எழுப்பி, அதற்கென்று தனித்துறையை உருவாக்கி, நாள்தோறும் அதனைப் பராமரிக்கின்ற பணிகளை அண்ணன் பிரபாகரன் மேற்கொண்டு வந்தார்.

### போராளிகளின் ஈகத்திற்கு மதிப்பு

எதிரிகளோடு மோதுவது, போர் உத்திகளை வகுப்பது, எதிரிகளை வீழ்த்தி விரட்டியடிப்பது, உலக நாடுகளின் சதித்திட்டங்களை முறியடிப்பது போன்ற பணிகளுக்கிடையில் இந்தப் போராளிகளையும் அவர்களின் ஈகத்தையும் மதிக்கக்கூடிய வகையில்

அடையாளம் கண்டு, வரிசைப்படுத்தி, பட்டியல்படுத்தி ஆங்காங்கே துயிலும் இல்லங்களில் நினைவிடங்களை எழுப்புகிற மகத்தான பணிகளை மேற் கொண்டவர் அண்ணன் பிரபாகரன் அவர்கள். எண்ணிப்பாருங்கள், ஒவ்வொரு முறையும் சிங்களக் காடையர்களின் கை ஓங்குகிற போதெல்லாம் அவர்கள் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதி களைக் கைப்பற்றுகிற போதெல்லாம் மாவீரர் துயிலும் இல்லங்களை இடித்துத் தரைமாட்டமாக்கி விடுவார்கள். யாழ்ப்பாணம் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தபோது அங்கு இருந்த 'கோப்பாய்' என்கிற இடத்தில் மாவீரர் துயிலும் இல்லத்தை முற்றாகச் சிதைத்து ஏரோட்டிவிட்டார்கள். அந்தச் சுவடு தெரியாமல் ஆக்கிவிட்டார்கள். மறுபடியும் புலிகள் யாழப்பாண நிலப் பரப்பைக் கைப்பற்றுகிறார்கள். சிங்களக் காடையர்களை விரட்டி விட்டார்கள். மறுபடியும் அதே இடத்தில் மாவீரர் துயிலும் இல்லம் ஏற்கெனவே எப்படி இருந்ததோ அப்படி உருவாக்கப்பட்டது.

**மாவீரர் நாள் உரை**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும், தமிழீழத் தேசியத் தலை வருமான அண்ணன் பிரபாகரன் அவர்கள் சரியாக மாலை 6.05 மணியளவில் வீரவணக் கத்தைச் செலுத்திவிட்டு மாவீரர் நாள் உரையாற்றுவது வழக்கம். வருடத்திற்கு ஒருமுறைதான் அவர் உரையாற்றுவார். ஆனால், எங்கிருந்து பேசுகிறார் என்று எவருக்கும் தெரியாது. அவருடைய பேச்சை எல்லா மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பெரிய திரைகளை அமைத்து ஒலிபரப்புவது உண்டு. 2004ஆம் ஆண்டு நான் இதே நாளில் விசுவமேடில் நின்றபோது வீரவணக்க நிகழ்வில் பங்கேற்றேன்.

கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேருக்கான கல்லறைகள் அந்த இடத்தில் உண்டு. 4 ஆயிரம் போராளிகளின் கல்லறைகள் ஒரே இடத்தில். ஒவ்வொரு கல்லறையின் முன்பும் அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வந்து நின்று கண்ணீர் விட்டுக் கதறியழுது வீரவணக்கம் செலுத்துகிற காட்சி நெஞ்சை உருவாக்குவதாக இருந்தது. அந்த இடத்தில் ஒரு படைத்தளபதி வந்து மக்களோடு நின்று வீரவணக்கம் செலுத்தினார். பின்னர், மாவீரர் நாள் உரை திரையிடப்படுகிறது. அண்ணன் பிரபாகரன் அவர்கள் உரையாற்றுகிற வரையில் அவ்வளவு பேரும் அந்த இடத்தை விட்டுக் கலையவில்லை.

**புலிகளை எதிர்கொள்ள முடியாத இந்திய அமைதிப்படை**

இந்தியா மிகப்பெரிய இராணுவ வலிமை கொண்ட ஒரு தேசம். அப்படி எண்ணித்தான் இந்திய அமைதிப்படையை ஈழத்திற்கு இந்திய ஒன்றிய அரசு 'IPKF' (இந்திய அமைதிப்படை) என்கிற பெயரில் அனுப்பி வைத்தது. அந்தப் படையில் ஒரு இலட்சம் பேர் இடம்பெற்றிருந்தார்கள். ஆனால், அவர்கள் திரும்பி வருகின்ற போது ஒரு இலட்சம் பேர் இல்லை. எத்தனை பேர் இந்திய அமைதிப்படையைச் சார்ந்தவர்கள் உயிரிழந்தார்கள் என்கிற கணக்கை இதுவரையில் இந்திய அரசு யாருக்கும் சொல்லவில்லை. அவர்கள் நினைத்ததைப்போல் புலிகளை எதிர்கொள்ள முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் 'திருநெல்வேலி என்கிற ஒரு ஊர் இருக்கிறது. அந்தப் பகுதியில் அண்ணன் பிரபாகரன் இருக்கிறார் என்கிற தகவல் அறிந்து அங்கேயே அவரைக் கைது செய்துவிடவேண்டும் அல்லது காலி செய்துவிடவேண்டும் என்கிற எண்ணத்தோடு இந்திய அமைதிப் படையின் முன்னணித் தளபதிகள், சீக்கியப் படைத் தளபதிகள், இராணுவத்திற்கே உரிய ஹெலிகாப்டரில் வந்து திடுமென அவர் இருந்த இடம்நோக்கி இறங்கினார்கள். அவர்கள் எதிர்பார்க்கவில்லை; இறங்க, இறங்க ஒவ்வொருவரையும் சுட்டுத்தள்ளியது புலிகளின் படை. புலிகள் உளவறிவதிலும் எவ்வளவு கெட்டிக்காரர்கள் என்பதை அன்றைக்குத்தான் இந்திய அரசு புரிந்தது. அவர்கள் இப்படியொரு 'ஆபரேஷன்' செய்யப்போகிறார்கள் என்பது புலிப்படைக்குத் தெரிந்திருக்கிறது. அங்கிருந்து தப்பியோட வேண்டும் என்று பிரபாகரன் அவர்கள் முயற்சிக்கவில்லை. ஹெலிகாப்டரைவிட்டு இறங்க இறங்க அத்தனை பேரையும் வீழ்த்தியவர்கள்

புலிகள் என்கிற வரலாறு உண்டு. அப்போதுதான், புலிகளை இலகுவாகக் கையாள முடியாது என்பதை இந்திய அமைதிப்படை உணர்ந்தது.

**எட்டுமுறை தோல்வி**

எட்டுமுறை அவரைச் சுற்றிவளைத்தது இந்திய அமைதிப்படை. ஒவ்வொரு முறையும் அவரைக் கைதுசெய்துவிட முடியும் என்று நம்பியது. அல்லது சுட்டுக்கொன்றுவிட முடியும் என்று கணக்குப் போட்டது. எட்டு முறையும் இந்திய அமைதிப்படை தோல்வியடைந்தது. உலக நாடுகளே புலிகளின் இந்த இராணுவ உத்திகளைக் கண்டு நடுங்கின. அந்தக் களத்தில் சிங்களப் படையினருக்கு உதவியாக அமெரிக்கப் படையினர் இருந்தார்கள் என்பதும் வரலாறு. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய அனைத்து நாடுகளும் சிங்களவர்களுக்கு ஆதரவு. இப்படிச் சுற்றியுள்ள பல நாடுகள், அமெரிக்க ஆதரவு நாடுகள் எல்லோரும் சேர்ந்து இந்த இயக்கத்தை அழித்தொழிப்பதற்குப் பல ஆண்டுகள் போராடினார்கள். ஆனாலும், அவர்களை வீழ்த்த முடியவில்லை.

**கடைசியில் என்ன நடந்தது?**

இந்திய அமைதிப்படையை முதலில் குலவையிட்டு வரவேற்று மகிழ்ந்தவர்கள் ஈழத் தமிழ்ப்பெண்கள். "எங்களுக்காக இந்திய மண்ணிலிருந்து ஒரு இலட்சம் பேர் வந்திருக்கிறார்கள்" என்று மகிழ்ச்சியடைந்தார்கள். "எங்களுக்கு நல்ல காலம் பிறந்தது" என்று நம்பினார்கள். ஆரவாரம் செய்து வரவேற்றார்கள். ஆனால், சில நாட்களில் அல்லது சில மாதங்களில் அவர்களின் நோக்கம் என்னவென்பதைப் புரிந்து கொண்டார்கள். அவர்களின் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிரானதாக அமைந்தன. அண்ணன் பிரபாகரன் அவர்களைக் குறிவைத்துக் காய்களை நகர்த்தியது மக்களுக்குத் தெரிந்தது. இந்திய அமைதிப்படையை முதன் முதலாக எதிர்த்து போராளி மாலதி என்கிற பெண்மணி களப்பலியானது அக்டோபர் 10. அவர்தான் முதல் களப்பலி. இதில், இன்னொன்றையும் நாம் அரசியல்ரீதியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

'IPKF' களத்தில் இருந்த போது அந்த மண்ணை ஆண்டவர் பிரேமதாசா. அப்போது

நமது
**தமிழ்மண்**

அடித்தட்டு மக்களை
அரசியல்படுத்தும் கருத்துவெளி

ஜனவரி 2026
தமிழ் 20 | மண் 223

ஆசிரியர் - வெளியிடுபவர்
**முனைவர் தொல்.திருமாவளவன்**

பொறுப்பாசிரியர்
**பூவிழியன்**

ஒளி அச்சு
**கவினி**

இதழ் வடிவமைப்பு
**நீல.தமிழேந்தி**
**மெய்யருள்**

மெய்ப்பு
**தமிழன் இளங்கோ**

புகைப்படங்கள்
**சூம் எழில்இமயன்**

பதிவு முகவரி:
எல்.ஐ.ஜி அடுக்ககம்,
எண்: எல் - 12பி, தரைத்தளம்,
சர்வமங்களா குடியிருப்பு,
அசோக் நகர், சென்னை 600 083
பேச: 97878 54141

மின்னஞ்சல்:
thamizhmannvck@gmail.com

இணையதளம்
www.thamizhmann.in
www.namadhuthamizhmann.blogspot.com

தனி இதழ் : ரூ.15
இதழ் வளர்ச்சி நிதி : ரூ.2000
(ஐந்தாண்டுகள்)
NAMADHU THAMIZHMANN
எனும் பெயரில் வரைவோலை(DD)




பிரேமதாசாவுக்கும் இந்திய அமைதிப் படையை வெளியேற்ற வேண்டும் என்கிற நோக்கம் இருந்தது. புலிகளும் இந்திய அமைதிப்படையை விரட்டவேண்டும் என்று போராடினார்கள். புலிகளுக்கும், பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கும் இடையில் மிகப்பெரிய பகை, நெடும்பகை. ஆனாலும், அப்போது 'IPKF'– ஐ விரட்டுவதற்கு பிரேமதாசாவும், அண்ணன் பிரபாகரனும் ஒரு உடன்படிக்கைக்கு வந்தார்கள்; சேர்ந்து களமாடினார்கள். இந்த அரசியல் நாம் அறிந்துகொள்ள வேண்டிய அரசியல்; புரிந்துகொள்ள வேண்டிய அரசியல். பிரபாகரனை அழித்தொழிக்க வேண்டும் என்ற வேட்கை கொண்டவர் பிரேமதாசா. பிரேமாதாசாவை வீழ்த்தி தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்று போராடுகிறவர் அண்ணன் பிரபாகரன். ஆனாலும், இந்திய அமைதிப்படை, இந்தியப் பேரரசு இலங்கை அரசியலுக்குள் தலையீடு செய்து இத்தகைய நெருக்கடியைத் தருவது உடன்பாடானதல்ல என்கிற போது அவர்கள் இருவரும் அந்தப் புள்ளியில் ஒருங்கிணைந்த ஒரு அரசியலும் அங்கே அரங்கேறியது. அப்படி இந்திய அமைதிப்படையைத் திரும்பப் பெறப்பட்ட வரலாறு நிகழ்ந்தது.

**போராடியவர்களுள் நானும் ஒருவன்**

அப்போது நாங்கள் சட்டக்கல்லூரி மாணவர்கள். அமைதிப் படையை அனுப்ப வேண்டும் என்கிற கோரிக்கை வைத்துப் போராடியவர்களுள் நானும் ஒருவன். 'இந்திய அரசே, இந்திய அரசே! ஈழ மண்ணுக்கு அமைதிப் படையை அனுப்பி வை' என்று குரலெழுப்பி யிருக்கிறோம். முழக்கங்கள் எழுப்பியிருக்கிறோம். அப்போதெல்லாம் நாங்கள் எழுப்பிய முழக்கத்திற்குத் தீர்வு கிடைத்துவிட்டது என்று எண்ணிப் பெருமைப் பட்டோம். ஆனால், இந்தியப் பேரரசு எதற்காக அங்கே போனது என்றால், அதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதுவெல்லாம் பொதுவாழ்க்கையில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடுகிற களத்தில் இத்தகைய வரலாற்றைப் புரிந்துகொள்ள வேண்டியது நம்முடைய கடமை.

தேசிய இன விடுதலைப் போராட்டம் உலகத்தின் பல நாடுகளில் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; அந்தப் போராட்டம். இந்தியாவில் தனிநாடு கேட்டு பஞ்சாபில் 'காளிஸ்தான்' என்கிற ஒரு இயக்கம் உருவானது. தமிழ்நாட்டிலும் தமிழ்நாடு கேட்டு சில இயக்கங்கள் உருவாகின. வடகிழக்கு மாகாணங்கள் பல நாடுகள் தமிழ்நாடு கோரிக்கை வைத்து இன்றைக்கும் போராடிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு கோரிக்கை என்பது உலகத்தில் அவ்வப்போது மக்கள் இயக்கமாகப் பரிணமித்திருக்கிற

வரலாற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில்தான் இலங்கைத் தீவில் இரண்டு தேசிய இனங்கள் உள்ளன. சிங்கள மொழியைப் பேசுகிற 'சிங்கள தேசிய இனம்', தமிழ்மொழியைப் பேசுகிற 'தமிழ்த்தேசிய இனம்'. ஆனால், அங்கே அது சிங்களவர்களுக்கான தேசமாக அரசமைப்புச் சட்டத்தின் ஊடாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை தேசத்திற்கென்று உள்ள அரசமைப்புச் சட்டம். அது 'சிங்கள ராஷ்டிரம்' என்று அறுதியிட்டுக் கூறுகிறது. சிங்களமே ஆட்சி மொழி என்ற நிலை இருந்தது. தமிழர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள்.

**சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம்**

சிங்களம் படித்தால் தான் கல்வி பெற முடியும், வேலைவாய்ப்பு பெறமுடியும் என்கிற நிலை உருவானது. ஒட்டுமொத்த இலங்கைத் தீவை சிங்களத் தீவாக மாற்றுவது என்பதுதான் சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம். இன்றைக்கு இந்தியாவில் பா.ச.க.வும், ஆர்.எஸ். எஸ்.ஸும் ஒட்டுமொத்த இந்தியாவை இந்துக்களின் தேசமாக மாற்றவேண்டும் என்று போராடுவதைப் போல். அவர்கள் சிங்கள மொழி பேசும் பௌத்தர்களின் தேசமாக, சிங்களபௌத்த தேசமாக அதிகாரபூர்வமாக மாற்றவேண்டும் என்று விரும்பினார்கள். அதை எதிர்த்து வெகுண்டெழுந்து 'ஈழத்தந்தை' என்று அழைக்கப்படுகிற செல்வா என்கிற செல்வநாயகம் அவர்களின் தலைமையில் அமைதிவழிப் போராட்டம் தொடங்கி 25 ஆண்டுகள் நடந்தன. எங்கள் மொழிக்குப் பாதுகாப்பு வேண்டும், எங்கள் இனத்திற்குப் பாதுகாப்பு வேண்டும், எங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பு வேண்டும், எங்கள் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு வேண்டும், எங்களுக்கான வடக்கு – கிழக்கு மாகாணங்களை எங்களுக்கான தாயகமாக அங்கீகரிக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் எல்லாம் அறவழிப் போராட்டங்களின் மூலமாக முன்னெடுக்கப்பட்டன. ஆனால், "செவிடன் காதில் ஊதிய சங்கு" என்று முதுமொழி சொல்வார்கள். அப்படித்தான் சிங்கள ஆட்சியாளர்களின் காதில் அது ஏறவில்லை. அந்தச் சூழலில்தான் 13 வயதாக இருந்த பிரபாகரன் அவர்கள் ஆயுதம் ஏந்தும் போராளியாகத் தன்னை மாற்றிக்கொண்டு அப்போதிருந்த படைக்குழுவில் தன்னை இணைத்துக்கொண்டார்.

**குட்டிமணி, தங்கதுரை, ஜெகன்**

நான் இங்கே ஆவடியில் வந்து இறங்கியவுடன் ஒரு நினைவிடத்திற்கு மாலை வைக்கவேண்டுமென்று தோழர்கள் வந்து என்னை வண்டியிலிருந்து இறக்கினார்கள். 'இது என்ன நினைவுத்தூண்?' என்று கேட்டேன். "குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் ஆகியோருக்கான நினைவிடம் இது" என்று சொன்னார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாகுவதற்கு முன்பே ஈழ விடுதலைக்காகப் போராடி, கைது செய்யப்பட்டு, வெளிக்கடை என்கிற இடத்தில் உள்ள மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த போராளிகள் ஒரு கலவரத்தின்போது சிறையில் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். சிறைக்குள் கலவரம் வெடித்தது. தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக வன்முறை வெடித்தது. அப்போது, குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் என்கிற பல போராளிகள் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டார்கள்.

**தலைவிரித்தாடிய சிங்கள வெறியாட்டம்**

வழக்காடு மன்றத்தில் உன் வேட்கை என்னவென்று கேட்டபோது குட்டிமணி, "நான் உயிரோடு இருக்கும்போதே தமிழீழம் மலர்ந்துவிட வேண்டும் என்பதுதான் என் வேட்கை. ஒரு வேளை நான் இறந்துபோனால் அதன்பிறகு மலரவிருக்கிற தமிழீழத்தை நான் பார்க்க விரும்புகிறேன். எனவே, நான் இறப்பதற்கு முன்னதாகவோ அல்லது இறந்தவுடனோ என் கண்களை எடுத்து ஒரு பார்வை இல்லாத தமிழனுக்கு நீங்கள் பொருத்தவேண்டும். எதிர்காலத்தில் மலரும் தமிழீழத்தை அவன் வழியாக நான் என் கண்கள் மூலமாகக் காண விரும்புகிறேன்" என நீதிமன்றத்தில் அவர் சொன்ன வாக்கு மூலம் பதிவாகியிருந்தது. அதனால், அந்த வன்முறை வெறியாட்டத்தின்போது

குட்டிமணியைக் கொடூரமாகத் தாக்கி அவருடைய கண்களைத் தோண்டி பூட்ஸ் கால்களால் மிதித்து நசுக்கியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு சிங்கள வெறியாட்டம் தலைவிரித்தாடியது. அப்படி அண்ணன் பிரபாகரன் அவர்களுக்கு முன்னதாகவே போராளிக் குழுக்கள் அங்கே உருவாகிவிட்டன. அந்தப் போராளிக் குழுவில் மிக, மிக இளைய பொறுப்பாளராக, ஒரு போராளியாக தன்னை இணைத்துக்கொண்ட பிரபாகரன் எல்லோராலும் 'தம்பி' என்று அழைக்கப் பட்டார். அதனால்தான், அவருக்கு 'தம்பி பிரபாகரன்' என்ற பெயர் நிலைத்துவிட்டது என்று நாம் வரலாற்றில் அறிய வருகிறோம்.

**போராளிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்த காங்கிரஸ் அரசு**

அதன்பிறகு போராளிக் குழுக்கள் ஒன்று பலவாயின. அந்தப் போராளிக் குழுக்களில் ஐந்து குழுக்களைத் தேர்வு செய்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, மலையடிவாரங்களில் தங்கவைத்து, மாதக்கணக்கில் பயிற்சி கொடுத்து, அவர்களுக்கு கை நிறைய ஆயுதங்களைக் கொடுத்து அனுப்பியது யார் என்றால், இந்திய அரசு. இந்திய அரசு என்பதைவிட காங்கிரஸ் அரசு. காங்கிரஸ் என்பதைவிட இந்திராகாந்தி அம்மையார். இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையிலான அரசு. இந்திராகாந்தி தலைமையிலான அரசு. அதன் பிறகு அவர்கள் அந்தக் களத்திற்குச் சென்றார்கள். அவர்கள் தனித்தனியே இயங்கினார்கள். இந்திய அரசின் உளவுத்துறை 'RAW' தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியது.

போராளிக் குழுக்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கி, மோதலை உருவாக்கி, ஒவ்வொரு இயக்கமும் தங்களுக்குள் மோதிக்கொள்கிற நிலையை அது ஏற்படுத்தியது. ஏனென்றால், அவர்கள் விரும்புகிற வரையில் வளர்த்தார்கள், வளரவிட்டார்கள். ஏன் அவர்கள் விரும்பினார்கள், வளர்த்தார்கள் என்றால் அன்றைக்கு அதிபராக இருந்த ஜெயவர்த்தனே அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டையெடுத்தார். அப்போது உலகம் இருதுருவ அரசியலைக் கொண்டிருந்தது. அமெரிக்க ஆதரவு என்பது ஒரு துருவம். ரஷ்ய ஆதரவு என்பது இன்னொரு துருவம். உலகத்தில் இரண்டு ஏகாதிபத்திய நாடுகள் இருந்தன. ஒன்று அமெரிக்க முதலாளித்துவம், இன்னொன்று சோவியத் ரஷ்யா. அது கம்யூனிசத்தைக் கோட்பாடாகக் கொண்ட ஒருதேசம். ஆனாலும், அது ஒரு துருவத்தின் அடையாளமாக இருந்தது.

**இந்திய அரசுக்குப் பல நெருக்கடிகளைத் தந்த ஜெயவர்த்தனே**

இந்திராகாந்தி அம்மையார் இந்தியாவின் பிரதமராக இருந்தபோது இந்த இருதுருவ அரசியலில் ரஷ்யா சார்புநிலையை எடுத்தபோது ஜெயவர்த்தனே அமெரிக்க சார்பு நிலையை எடுத்தார். அதனால், ஜெயவர்த்தனே இந்திய அரசுக்குப் பல நெருக்கடிகளைத் தந்தார். இலங்கைக்குள் தலையீடு செய்யமுடியாத அளவுக்கான பல நெருக்கடிகள். இந்துப் பெருங்கடலில் பிரவேசிக்க முடியாத ஒரு நெருக்கடி. தொழில் வர்த்தக உறவுகளில் ஒரு நெருக்கடி. வெளிவிவகார அரசியலில் ஒரு நெருக்கடி. அமெரிக்கப் படைத்தளத்தை டிக்காகாஷியோ என்கிற இடத்தில் அமைப்பதற்கான சூழல் உருவானது. ஜெயவர்த்தனே அதற்கு அனுமதி தரும் சூழல் இருந்தது. அந்த இடத்தில் அமெரிக்கப் படைத்தளம் அமைத்தால் இந்தியாவின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகிவிடும் என்கிற அச்சம் இந்திராகாந்தி அம்மையாருக்கு இருந்தது.

இவ்வாறான சூழலில்தான் இந்திய அரசு ஈழத்தமிழர்களின் அரசியலில் தலையீடு செய்து 'உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம்' என்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கி, பயிற்சி கொடுத்து, ஆயுதம் கொடுத்து, ஊக்கப்படுத்தி, ஜெயவர்த்தனேவுக்கு எதிராக நிறுத்தி அரசியல் சித்து விளையாட்டைச் செய்தது. ஒரு கட்டத்திற்கு மேல் அரசியல் நிலை மாறுபடுகிறது. ரஷ்யா இல்லாமல் போகிறது உலகில். அதுவும் ஒருதுருவ அரசியல், அமெரிக்கா மட்டும் தான் உலகத்தின் பேரரசு, பெரிய வல்லாதிக்கம்

நிறைந்த ஏகாதிபத்தியம். இப்படிப்பட்ட ஒரு சூழலில் இந்திராகாந்தி படுகொலை செய்யப்படுகிறார். ராஜீவ்காந்தி பிரதமராகிறார். ராஜீவ்காந்தி பிரதமராகிறபோது இந்தப் பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைகிறது. அனைத்துப் போராளிக் குழுக்களையும் அழைத்துப் பேசுகிறார்கள். பிரபாகரனைத் தவிர மற்ற அனைவரும் இந்திய அரசின் வழிகாட்டுதலுக்கு உடன்பட இசைவு தருகிறார்கள். ஆயுதங்களைக் கீழே போட ஒப்புக்கொள்கிறார்கள். அண்ணன் பிரபாகரன் மட்டும் அதற்கு உடன்படவில்லை. இதுதான் பிரச்சினை.

> “
> காங்கிரசை வீழ்த்தி பா.ச.க.வை ஆட்சியில் அமர்த்தினார்கள் மக்கள். 11 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஒரு அங்குலமாவது ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு ஒரு முற்போக்கான நிலையை எடுத்தது என்று யாராவது சொல்ல முடியுமா?

### ஆயுதத்தைக் கீழே போட முடியாது

இந்திய அரசு பயிற்சி கொடுத்த போராளிக் குழுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும், அதன் தலைவர் அண்ணன் பிரபாகரன் அவர்கள் மட்டும் இந்திய அரசின் நெருக்கடிக்குப் பணிய மறுக்கிறார். தனிவிமானம் அனுப்பி திம்புக்கு வரவழைத்து அங்கே நெருக்கடியைத் தந்தார்கள்; டெல்லிக்கு வரவழைத்து அங்கே விடுதியில் பல நாட்கள் தங்கவைத்து நெருக்கடியைத் தந்தார்கள்; அதற்குப் பணியவில்லை. ‘எம் மக்களோடு பேசிவிட்டு நான் முடிவைச் சொல்கிறேன்’ என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்தவர் சுதுமலை என்கிற இடத்தில் மாபெரும் மக்கள் திரளைக் கூட்டி பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். அந்தக் கூட்டத்தில், “இந்திய அரசுக்கு எதிராக நாங்கள் ஆயுதம் ஏந்தவில்லை. எங்கள் போராட்டம், எங்கள் மண்ணுக்கான விடுதலைப் போராட்டம், ஒரு இனத்திற்கான விடுதலைப் போராட்டம். நாங்கள் ஏந்தியிருக்கிற ஆயுதம் சிங்கள பௌத்தப்பேரினவாதத்திற்கு எதிரானது. ஒருபோதும் எங்கள் ஆயுதம் இந்திய அரசுக்கு எதிராக இருக்காது. ஆகவே, நாங்கள் ஆயுதத்தைக் கீழே போடமுடியாது” என்று சொன்னவர் அண்ணன் பிரபாகரன். இதற்குப் பிறகுதான் இந்திய அமைதிப்படை அங்கே போனது. ஆகவே, அங்கே அமைதியை உருவாக்குவது அவர்களின் நோக்கம் இல்லை. தங்களின் நெருக்கடிக்குப் பணியாத பிரபாகரன் அவர்களைப் பிடிக்கவேண்டும் அல்லது அழித்தொழிக்க வேண்டும். இதுதான் இந்திய அரசின் நிலைப்பாடாக இருந்தது. அப்போது சொன்ன வார்த்தைதான் “Aftrol 2 thousand boys”. அதில் எத்தனை ஆயிரம் பேர் இருந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், ஒவ்வொரு குடும்பமும் புலிக் குடும்பமாகவே வாழ்ந்தது. அதுதான் புலிப் படையின் வெற்றி. ஒவ்வொரு குடும்பமும் புலிகள் இயக்கத்தைச் சார்ந்த குடும்பமாக அங்கே இருந்தது என்பதுதான் அவர்களின் வெற்றிக்கு, அந்தப் போராட்டத்தின் நீட்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

### எந்த நாட்டாலும் அங்கீகரிக்க முடியவில்லை

ஆனால், ஒரு கசப்பான உண்மையை நாம் சுயவிமர்சனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அது என்னவென்றால், அவ்வளவு மக்கள் பேராதரவோடு விளங்கிய அந்த இயக்கம் உலக அளவில் பயங்கரவாத இயக்கமாகவே நிலைப்படுத்தப்பட்டது. அது ஒரு மக்கள் இயக்கமாக, விடுதலை இயக்கமாக, தேசிய இன விடுதலைக்கான போராட்ட இயக்கமாக எந்த நாட்டாலும் அங்கீகரிக்க முடியவில்லை. யாரும் அதை அப்படி அடையாளப்படுத்த முன்வரவில்லை. அது பயங்கரவாத



மாவீரர்களை நினைவுகூர்ந்து ஈகைச் சுடரேற்றும் எழுச்சித்தமிழர்

இயக்கம். அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் இடிக்கப்படுகிறது. அதன்பிறகு உலக அரசியல் முற்றாக மாற்றம் பெறுகிறது. வேறு பரிணாம நிலையை எடுக்கிறது. இரட்டைக் கோபுரம் இடிப்புக்குப் பிறகு அரசியலின் திசைவழியே மாறிப்போனது. அமெரிக்க ஆதரவு நாடுகள் ஒன்றுசேர்ந்து 'உலக அளவில் பயங்கரவாதத்தை நாங்கள் ஒழித்துக்கட்டப் போகிறோம்' என்று ஆவேசப்பட்டன. இந்தச் சூழலில்தான் அல்கெய்தா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான ஒரு யுத்தத்தைத் தொடுக்க வேண்டும் என்று அமெரிக்கப் பேரரசு முடிவு செய்து தனது ஆதரவு நாடுகளையெல்லாம் திரட்டி, பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலைத் தயார் செய்தது. 20க்கும் மேற்பட்ட பட்டியலில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெயரும் இடம்பெற்றது. இந்தக் கோணத்தில் யாரும் இதைப் பேசுவதில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக இந்தியா மட்டுமல்ல; உலகத்தின் பல நாடுகளில் தடைவிதிக்கப்பட்டன. இன்னும் அந்தத் தடை நீடிக்கிறது. புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுவிட்டது என்று சொன்ன பிறகும், அறிவித்த பிறகும் இன்னும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் புலிகள் இயக்கத்திற்குத் தடை நீட்டிக்கப்பட்டிருக்கின்றது.

### வெட்டிச் சாய்க்கப்பட்ட தி.மு.க.வின் கொடிக் கம்பங்கள்

தமிழ்நாட்டில் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்படுகிறார். புலனாய்வு தொடங்குவதற்கு முன்பு 'புலிகள்தான் படுகொலை செய்தார்கள்' என்கிற செய்தி பரவுகிறது. தமிழ்நாட்டில் புலிகளுக்குத் துணையாக இருந்தது தி.மு.க.தான் என்று வதந்தியைப் பரப்பினார்கள். அப்போது காங்கிரசும், இதர எதிர்க்கட்சிகளும் எப்போதும் தி.மு.க.வை எதிர்க்கக்கூடிய அமைப்பைச் சார்ந்தவர்களும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வின் கொடிக்கம்பங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. அலுவலகங்கள் சூறையாடப்பட்டன.



தி.மு.க.வின் தூண்டுதல்களால் தான் புலிகள் ராஜீவ்காந்தியைப் படுகொலை செய்தார்கள் என்று ஓரிரு நாட்களில் செய்தி பரவி தமிழ்நாடு முழுவதும் வன்முறை வெறியாட்டம் அரங்கேறியது.

**ஆயுதம் ஏந்திய புலிகள் அகிம்சா வழியில் போராடுவதா?**

ஐ.ஜி. மோகன்தாஸ், அண்ணன் பிரபாகரன் அவர்களோடு தங்கியிருந் தவர்களின் கைகளில் இருந்த வயர்லஸ் ஆம்ஸ் அனைத்தையும் பறிமுதல் செய்கிறார். அப்போது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உதகையில் நடைபெற்ற மலர் கண்காட்சியில் பங்கேற்று அங்கே நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிக் கொண்டிருக்கிறபோது இங்கே அது நடக்கிறது. அப்போது அவர் சாகும்வரை உண்ணாவிதப் போராட்டம் அறிவிக்கிறார். அந்தத் தகவல் அறிந்த நான் பத்துப்பேரோடு அந்த இடத்திற்குப் போய் முழக்கம் எழுப்பியிருக்கிறேன். ‘உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுங்கள்! ஆயுதம் ஏந்திய புலிகள் அகிம்சா வழியில் போராடுவதா? உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்’ என்று போராடிய மாணவக் குழுவில் நானும் ஒருவன். அவர்களைத் திரட்டியவர்களுள் நானும் ஒருவன். எங்களைப் பார்த்து அவர் பேசினார்.

**நாங்கள் எப்போதும் புலிகள் பக்கம் நிற்பவர்கள்**

நான், அண்ணன் பிரபாகரன் அவர் களோடு உரையாடியவன். மணிக் கணக்கில் அவரை உற்றுக் கவனித்தவன்; மாணவப் பருவத்திலிருந்து அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கவனித்தவன்; ஒவ்வொரு மாவீரர் நாள் உரையையும் அவ்வப்போது கேட்டவன்; அதன்பிறகு ஒட்டுமொத்த மாவீரர் நாள் உரையையும் மொத்தமாகப் படித்தவன் என்கிற முறையில் அவருடைய உளவியலைப் புரிந்தவன். எனவே, அந்த வரலாற்றுப் பிழையை அவர் செய்திருக்க வாய்ப்பில்லை என்பதுதான் இப்போதும் என்னுடைய நம்பிக்கை. ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு எல்லாம் தலைகீழாக மாறுகிறது. இந்திய அரசியல் சூழலும் மாறுகிறது. இரட்டைக் கோபுர இடிப்புக்குப் பிறகு உலக அரசியல் சூழல், சர்வதேச அரசியல் சூழல் மாறுகிறது. அதுவரையில் தமிழ்நாட்டில் எல்லாக் கட்சிகளும் ஈழ ஆதரவு நிலையை எடுத்தார்கள். ஆளுக்கொரு போராளி இயக்கத்தை ஆதரித்தார்கள்.

குறிப்பாக, சிறீ சபாரத்தினா தலைமையிலான ‘டெலோ’ இயக்கத்தை தி.மு.க ஆதரித்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஆதரித்தன. எல்லாப் போராளிகள் இயக்கத்தையும் ஆதரிக்கிற நிலை இருந்தது. ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு எந்த இயக்கத்தையும் ஆதரிப்பதில்லை என்கிற நிலை தமிழ்நாட்டில் உருவானது. அப்போது வெகுண்டெழுந்த இயக்கம் தான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. ‘நாங்கள் எப்போதும் புலிகள் பக்கம் நிற்பவர்கள்.’ 90களின் தொடக்கத்திலிருந்து அதைப்பேசி வருகிறவன் நான். இன்றைக்கு, நேற்றைக்கு அல்ல. பல சில்லுண்டிகள் விடுதலைச் சிறுத்தைகளை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் அறியாமையில் உழலும் அற்பர்கள் விடுதலைச் சிறுத்தைகளின், திருமாவளவனின் வரலாறு தெரியாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மூடர்களுக்கு இந்த அரசியலின் பின்னணி தெரியாது. அவர்கள் இந்த அரசியலைப் படித்திருக்கவும் வாய்ப்பில்லை, கேட்டிருக்கவும் வாய்ப்பில்லை.

**‘நம்பிக்கையோடு போராடுங்கள்’ என்று சொன்னவர் அண்ணன் பிரபாகரன்**

என்னை ஒருமுறையல்ல; இருமுறை மார்போடு கட்டித்தழுவியவர் அண்ணன் பிரபாகரன். அப்போது, “என் தலைமையை ஏற்றுகொள்வதற்கு பல ஆண்டுகள் பிடித்தன. உங்கள் தலைமையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள இன்னும் பல ஆண்டுகள் ஆகும். ஆனால், நம்பிக்கையோடு போராடுங்கள்” என்று சொன்னவர் அண்ணன் பிரபாகரன். அவர் இல்லையென்று நான் இப்படிப் பேசவில்லை. அவரோடு இருந்த பலர் இன்றைக்கும் இருக்கிறார்கள். என்மீது

அவர் கொண்டிருந்த பற்றுதலை பலர் இப்போதும் சிலாகித்துப் பேசுகிறார்கள்.

**ஈழத்தமிழர் பிரச்சினையில் பா.ச.க. எடுத்த நிலைப்பாடு என்ன?**

காங்கிரசை வீழ்த்தி பா.ச.க.வை ஆட்சியில் அமர்த்தினார்கள் மக்கள். 11 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஒரு அங்குலமாவது ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு ஒரு முற்போக்கான நிலையை எடுத்தது என்று யாராவது சொல்ல முடியுமா? காங்கிரசை வீழ்த்திவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று ஒரு கும்பல் உளறிக்கொட்டியது. தி.மு.க.வை வீழ்த்திவிட்டால், இலை மலர்ந்தால் ஈழம் மலரும் என்றெல்லாம் பேசினார்கள்.

1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு அந்த அரசியலைப் பற்றி பேசாத ஒரு கட்சி தமிழ்நாட்டில் அ.தி.மு.க.தான். ‘பிரபாகரனைக் கைது செய்து குற்றவாளிக்கூண்டில் நிறுத்த வேண்டும்’ என்று தீர்மானம் போட்டவர் செல்வி ஜெயலலிதா அம்மையார். சோனியாகாந்தி அம்மையாரைவிட பிரபாகரனின் மீது கடும் கோபத்தில் இருந்தவர் செல்வி ஜெயலலிதா அம்மையார். இந்த வரலாற்றை எல்லாம் மறைத்துவிட்டு வெறும் கருணாநிதி எதிர்ப்பு என்கிற வகையில் ஈழத்து அரசியலைச் சுருக்கிவிட்டார்கள் சிலர். ஈழத்து அரசியலில் தமிழ்நாடு மாநில அரசு எதுவும் செய்துவிட முடியாது. ஆதரவு குரல், துணைக்குரல் எழுப்ப முடியும் அவ்வளவுதான்.

மக்களவையில் உள்ள 545 உறுப்பினர்களில் வெறும் 40 உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அந்த 40 உறுப்பினர்களில் தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ அதிகபட்சம் 20 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். 40 உறுப்பினர்களும் ஒரே நிலைப்பாட்டை எடுத்து அழுத்தம் கொடுத்தாலும்கூட இந்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இந்த அடிப்படை அரசியலைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, இந்திய அரசின் ஆதரவு நமக்குத் தேவை என்கிறபோது அதனடிப்படையில் தான் ஈழத்து அரசியலில் காய்களை நகர்த்த வேண்டும். சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பைப் பெறவேண்டும். அதனடிப் படையில்தான் ஈழத்து அரசியலின் காய்களை நகர்த்த வேண்டும்.

**வலதுசாரிகள், இனவாதிகள், மதவாதிகள்**

இப்போது அங்கே ஒரு சூழல் மாறியிருக்கிறது. இதுவரையில் அதிதீவிர வலதுசாரிகள், இனவாதிகள், மதவாதிகள் ஆட்சிப்பீடத்தில் இருந்தார்கள். இப்போது இடதுசாரிகள் என்று சொல்லிக்கொள்கிற ஒரு கட்சி ‘JVP’ ஆட்சிக்கு வந்திருக்கிறது. இந்த நிலையில் அவர்களும் இனவாதிகளாக இருக்கிறார்கள் என்பதை அண்மையில் நான் யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது, தோழர்களோடு உரையாடியபோது உணர முடிந்தது. அனுரகுமார திசாநாயக்க முற்போக்கானவர் என்று சொல்லிவிட முடியாது. அவரும் ஒரு இனவாத அரசைத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்.

தமிழர்களுக்கு பெரிய ஆதரவாக இல்லை என்பதை சொன்னார்கள். அவர் இப்போது அரசமைப்புச் சட்டத்தை மாற்றி எழுத முயற்சிக்கிறார். அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்; அதற்காக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்த முயற்சி நடைமுறைக்கு வர வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சூழலில் இன்றைக்கு தமிழீழ அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசின் உதவியை அல்லது துணையை நாடுகிறார்கள். அவர்களோடு நான் உட்கார்ந்து பேசியபோது அதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

**ஒற்றையாட்சி முறையை மாற்றி கூட்டாட்சி முறை**

இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்தார்கள். அது 13வது திருத்தம். இந்திய– இலங்கை ஒப்பந்தந்தத்தின் அடிப்படையில் அந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் சொன்னபடி செய்யவில்லை. ஒரு திருத்தம் செய்தார்கள்

அவ்வளவுதான். அதனால், எந்த அதிகாரமும் மாகாண சபை முதல்வருக்கு இல்லை. "மாகாண சபை அவையை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள், நீங்களே தேர்தலில் பங்கேற்று முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள், உங்களில் ஒருவர் முதலமைச்சராக வடக்கு–கிழக்கு மாகாணத்திற்கு இருக்கட்டும்." இதுதான் அந்த ஒப்பந்தம். இதுதான் அந்தத் திருத்தம். ஆனால், அதிகாரம் இல்லாத ஒரு பதவி. எனவே, புதிதாக எழுதப்போகிற அரசமைப்புச் சட்டத்தில் இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது இருக்கிற ஒற்றையாட்சி முறையை மாற்றி கூட்டாட்சி முறையில் ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டுவர வேண்டும். அதற்கேற்ப இலங்கை அரசமைப்புச் சட்டத்தை எழுத வேண்டும். அப்படியென்றால் வடக்கு–கிழக்கு மாகாணங்கள் முழுமையான தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஒரு மாகாணமாக இருக்கும். ஆனால், அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு ஒரே தீவாக இருக்கும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் முழுமையான கூட்டாட்சி முறை கிடையாது. ஆனால், குறைந்தபட்ச அளவுக்கான அதிகாரம் கொண்ட ஒரு கூட்டாட்சி முறை இருக்கிறது. நாம் முழுமையான கூட்டாட்சியைக் கேட்கிறோம். அதுதான் மாநில சுயாட்சி. அதே கோரிக்கையை இன்றைக்கு ஈழத்தமிழர்கள் முன்வைக்கிறார்கள். அது தொடர்பாக இந்திய ஒன்றிய அரசு தலையீடு செய்யவேண்டும் என்று கோருகிறார்கள். இந்திய அரசு தலையீடு செய்யமுடியும். ஏனென்றால், ராஜீவ் – ஜெயவர்த்தனே ஒப்பந்தம் இன்னும் உயிர்ப்போடு இருக்கிறது. இந்திய – இலங்கை ஒப்பந்தம் இன்னும் உயிர்ப்போடு இருக்கிறது. எனவே, அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்று வலியுறுத்துவதற்கு உரிமை இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது, தலையீடு செய்யமுடியும்.

**தமிழ்நாடு முதலமைச்சரும் சேர்ந்து வலியுறுத்த வேண்டும்**

இந்த மாபெரும் கூட்டத்தின் ஊடாக இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முன்வைக்கக்கூடிய கோரிக்கை இந்திய–இலங்கை ஒப்பந்தப்படி இந்திய அரசு உடனடியாக அதில் தலையீடு செய்வதற்கு முன்வரவேண்டும். புதியதாக எழுதவிருக்கிற அரசமைப்புச் சட்டம் கூட்டாட்சி நிர்வாக முறையைக் கொண்டிருப்பதாக அமைய வேண்டும். தமிழர்களுக்கான தாயகம்–தேசியம்–தன்னாட்சி என்பதை அங்கீகரிக்க வேண்டும். அவர்களுக்கு முழுமையான ஆட்சியதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும். தன்னாட்சி அதிகாரப்பகிர்வை வழங்க வேண்டும் என்று இந்த மாவீரர் நாள் நிகழ்வின் ஊடாக நான் இந்திய அரசுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். அந்தக் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சரும் சேர்ந்து வலியுறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அண்மையில் அவரைச் சந்தித்தபோது நம் இயக்கத்தின் சார்பில் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதை மீண்டும், மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லி, முதல் முறையாக அண்ணன் பிரபாகரன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி நாம் வீரவணக்கம் செலுத்தியதை பலர் ஆதரவாகவோ, எதிராகவோ புரிந்துகொள்ளக் கூடும். அந்த மலரை அள்ளித் தூவுகிறபோது என் மனம் பொறுக்கவில்லை, பதறியது. ஆனாலும், உண்மை உண்மையாகத்தான் எப்போதும் இருக்கும்; வேறு வழியில்லை. எனவே, அவருடைய வீரம் செறிந்த வரலாற்றை நாம் இழுக்குச் செய்வதுபோல் அமைந்துவிடும் என்பதனால் அவரை மாவீரராய் நாங்கள் நினைவுகூர்ந்து அவருக்கு எமது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்தி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

### திருப்பரங்குன்றம்:

# உயர்நீதிமன்றத் தீர்ப்பு நீதித்துறை மீதான நம்பிக்கையைத் தகர்க்கிறது!

முனைவர் தொல்.திருமாவளவன்




**தி**ருப்பரங்குன்றம் பிரச்சினை தொடர்பாக இன்று வழங்கப்பட்டிருக்கும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் தீர்ப்பு நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையைத் தகர்ப்பதாக அமைந்துள்ளது. இந்தத் தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் மதநல்லிணக்கச் சூழலைச் சீர்குலைப்பதற்கு வழிவகுப்பதாகவும் அமைந்துள்ளது.

எனவே இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்யவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். மக்கள் ஒற்றுமையைப் பாதுகாக்க மதச்சார்பற்ற சக்திகள் உறுதியோடு ஒன்றிணைந்து நிற்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம். திருப்பரங்குன்றத்தில் காலங்காலமாக பிள்ளையார் கோவில் அருகில் தான் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வருகிறது. இது தொடர்பாக ஏற்கனவே நீதிமன்றத் தீர்ப்புகளும் உள்ளன.

அவ்வாறு இருக்கையில் தர்காவுக்கு அருகில் உள்ள தூணில்தான் தீபமேற்றுவோம் என்று சில பிரிவினைவாதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு ஆதரவாக சட்டத்துக்குப் புறம்பான முறையில் முதலில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதை எதிர்த்து இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வில்



> தமிழ்நாட்டின் அமைதியைச் சீர்குலைத்து வட மாநிலங்களில் நிகழ்வதுபோல இங்கும் வகுப்புக்கலவரங்களை நடத்த சில பிரிவினைவாதிகள் மும்முரமாக உள்ளனர்.

செய்யப்பட்ட மேல்முறையீட்டில் தனி நீதிபதி கொடுத்த தீர்ப்பையே வழிமொழிந்து இப்போது தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. சமய சார்பின்மைக்கும், மத நல்லிணக்கத்துக்கும் எதிரான இந்தத் தீர்ப்பு நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கையைத் தகர்ப்பதாக அமைந்துள்ளது. 170 பக்கங்கள் கொண்ட இந்தத் தீர்ப்பில் பன்னிரு திருமுறைகள் பற்றியும், மெய்கண்ட சாஸ்திரம், சிவஞானபோதம் குறித்தும் அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் நெறிகள் குறித்தும் நீதிபதிகள் விவரித்துள்ளனர். ஆனால், அவர்கள் குறிப்பிடும் எந்த விஷயமும் அங்கு இருக்கும் தூண் தீபம் ஏற்று வதற்கானதுதான் என்றோ அதில் தீபம் ஏற்றப்பட்டதென்றோ மெய்ப்பிக்கவில்லை.

இந்த வழக்கு அந்தத் தூணில்தான் தீபம் ஏற்றவேண்டும் என வாதிடும் ஒரு நபரால் தொடரப்பட்டுள்ளது. அவரிடம் அதற்கான ஆதாரத்தை நீதிமன்றம் கேட்டிருக்கவேண்டும். அது தான் சட்டப்படியான வழிமுறை. அதற்கு மாறாக கோயில் நிர்வாகமும், தமிழ்நாடு அரசும் அது தீபம் ஏற்றும் தூண் இல்லை என நிரூபிக்கத் தவறிவிட்டதாக நீதிபதிகள் கூறியுள்ளனர். இது என்ன வகையான நீதியென்று புரியவில்லை.

இந்து சமய அறநிலையத்துறைக்காக வாதாடிய வழக்கறிஞர்களில் ஒருவர் ‘அந்தத் தூண் எதற்காக நாட்டப்பட்டது எனத் தெரியவில்லை’ எனக் கூறிய தாகவும், இன்னொருவர் ‘அது தீபம் ஏற்றுவதற்கானதுதான் ஆனால் சமணத் துறவிகள் இரவு நேரத்தில் அதன் கீழே அமர்ந்து விவாதிப்பதற்காக நாட்டப்பட்டது’ என்றும் கூறியதாகத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பைப் படிக்கும்போது இந்து சமய அறநிலையத்துறை சார்பில் முன்வைக்கப்பட்ட கருத்துகளில் ஒருமித்த நிலை இல்லை என்பதாகத் தோன்றுகிறது. இது கவலை அளிப்பதாக உள்ளது. மேல் முறையீடு செய்யும்போது அரசாங்கத்தின் நிலை தெளிவாக விளக்கப்பட வேண்டும். அதற்குரிய வழிகாட்டுதல்களை அரசு தலைமை வழக்கறிஞர் அளிக்க வேண்டும்.

சுதந்திரம் பெற்ற பிறகு நீதிமன்றங்கள் ஆதாரங்களின் அடிப்படையிலும், சட்டத்தின் அடிப்படையிலும் தீர்ப்புகளை வழங்கி வந்தன. அண்மைக்காலமாக அந்த நிலை மாறி இப்போது நம்பிக்கைகளின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கப்படுவது அதிகரித்து வருகிறது. இதை ‘சுதேசி நீதிபரிபாலன முறை’ என சில நீதிபதிகள் அழைக்கவும் தொடங்கியுள்ளனர்.

அந்த வகையான தீர்ப்புகளின் வரிசையில் இந்தத் தீர்ப்பையும் வைக்கலாம். அரசமைப்புச் சட்டத்தின் பெயரால் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட நீதிபதிகள் அரசமைப்புச் சட்டத்தின் ஆன்மாவைவே சிதைப்பதுபோல அதற்கு விளக்கமளிப்பது அரசமைப்புச் சட்டத்தை அழிப்பது தவிர வேறல்ல. அரசமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தியுள்ள மதச்சார்பின்மைக்கு எதிரான இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் அமைதியைச்சீர்குலைத்து வட மாநிலங்களில் நிகழ்வதுபோல இங்கும் வகுப்புக் கலவரங்களை நடத்த சில பிரிவினைவாதிகள் மும்முரமாக உள்ளனர். அவர்களுக்கு இடங்கொடாமல், மக்கள் ஒற்றுமையைக் காப்பாற்றவும், தமிழ்நாட்டில் அமைதியும் நல்லிணக்கமும் நிலவவும் அனைத்து சனநாயக சக்திகளும் உறுதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்துகிறோம்.

**அறிக்கை | 07.01.2026**



# திராவிடம் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானது அல்ல!

**முனைவர் தொல்.திருமாவளவன்**

தமிழ்நாடு இந்தியாவுக்கே வழி காட்டும் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. கொள்கை கோட்பாடுகளை முன்னெடுப்பதிலும்; அரசியல் நடவடிக்கை களை மேற்கொள்வதிலும்; ஆட்சி நிர்வாக நடைமுறைகளிலும் எனப் பல்வேறு தளங்களில் பிற மாநிலங்களிலிருந்து மாறுபட்டு முற்போக்கான வழிமுறைகளைப் பின்பற்றும் சிறப்புக்குரிய மாநிலம் தமிழ்நாடு என்பது நாடறிந்த ஒன்றாகும்.

சமூகநீதி, மாநில சுயாட்சி, மொழி – இன உரிமைகள் மற்றும் கலாச்சார உரிமைகள் போன்றவற்றில் மிகவும் உறுதியாக நின்று, அதேவேளையில், ‘இந்திய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு’ எவ்வகையிலும் பாதிக்காதவாறு வாதாடிப் போராடித் தனது தனித்துவத்தைப் பாதுகாத்து வருகிறது. குறிப்பாக, இந்திய அரசமைப்புச் சட்டம் முன்னிறுத்தும் மதச்சார்பின்மை, பன்மைத்துவம், கூட்டாட்சியம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற உயரிய கோட்பாடுகளைப் பாதுகாக்கும் வகையில், வலதுசாரி பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராகச் சற்றும் பின்வாங்காமல் தீவிரமாகப் போராடி வருகிறது. இத்தகைய சிறப்பான அரசியல் மாண்புகளைக் கொண்டதோர் மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதற்கு சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியாரும் அவரது கருத்தியல்

தலைமை மாணாக்கர் பேரறிஞர் அண்ணாவும் இம்மண்ணில் விதைத்த ‘சமத்துவச் சிந்தனை’களே அடிப்படைக் காரணங்களாகும். அவையே இன்று ‘திராவிட அரசியல்’ என அறியப்படுவதாகும். சமூகத்தில் நெடுங்காலமாக நிலைத்து நிற்கும் பாகுபாடுகளுக்கும் அவற்றினடிப் படையிலான வன்முறைகள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கும் காலம் காலமாக நீடிக்கும் உழைப்புச் சுரண்டலுக்கும் மூலாதாரங்களாக விளங்கும் ‘சனாதனச் சிந்தனைகளே’ காரணங்களாகும். அவையே இன்று ஆரியமாக அல்லது பார்ப்பனியமாக அல்லது ஆர்.எஸ். எஸ்.ஸின் இந்துத்துவா என்பதாக அறிப்படுவனவாகும்.

**திராவிடம் என்கிற சமத்துவக் கோட்பாடு**

பெரும்பான்மையான உழைக்கும் எளிய மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்கள் திமிறி எழுவதற்கே இடமளிக்காதவகையில், திட்டமிட்ட கொடூரமான ஒடுக்குமுறை களின் மூலம் அவர்களின் உழைப்பை, ஈவிரக்கமின்றிச் சுரண்டிக் கொழிக்கும் எத்தர்கள், உயர்த்திப் பிடிக்கும் கோட்பாடான சனாதனத்துக்கு எதிராக, தமிழ்மண்ணில் பெரியாரும் அண்ணாவும் சமூகநீதி, சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய சனநாயகக் கோட்பாடுகளைப் பரப்பி மக்களை அரசியல்படுத்தினர். அவையே இன்று திராவிடம் என்கிற சமத்துவக் கோட்பாடாகச் செழுமை பெற்றுள்ளது. இக்கோட்பாடு சனாதனச் சக்திகளை அம்பலப்படுத்தி வருகிறது. அக்கும்பலின் அதிகார வலிமையை நிலைகுலையச் செய்கிறது. படிப்படியாக அவர்களின் ஆதிக்கத்தை வலுவிழக்கச் செய்து அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்து எளியோரையும் அதிகாரமயப்படுத்துகிறது.

இந்தப் புரட்சிகர மாற்றங்களை ஏற்க மனமில்லாதவர்கள் ‘திராவிடம்’ என்கிற கருத்தியலை எதிர்த்து நெடுங்காலமாகக் கூச்சலிட்டு வருகின்றனர். குறிப்பாக, மனுதர்ம நெறிகளை, சனாதனக் கொள்கைகளைப் புனிதமெனக் கருதிப் போற்றுபவர்கள், திராவிடத்தின்மீது பகைமை கொண்டு அதற்கு எதிராகப் பல்வேறு சதிகளைத் தீட்டி, திரிபுவாதக் கருத்துகளைப் பரப்பி, பண்டிதர் அயோத்திதாசர் காலத்திலிருந்தே செயல்பட்டு வருகின்றனர். அதாவது, திராவிடம் எனும் சமத்துவக் கருத்தியலுக்கு எதிராக பார்ப்பனியம் என்னும் சனாதனக் கருத்தியல் செயல்பட்டு வருகிறது.

**பார்ப்பனியத்தின் பகை திராவிடமே**

திராவிடத்தின் பகை பார்ப்பனியமே. பார்ப்பனியத்தின் பகை திராவிடமே. திராவிடம் என்பது தமிழுக்கோ, தமிழருக்கோ, தமிழ்நாட்டுக்கோ எதிரானது அல்ல; மாறாக, தமிழ் உணர்வையும், தமிழ்ப் பாதுகாப்பையும் உயர்த்திப் பிடிப்பதே ஆகும். அத்துடன்,இந்தி மற்றும் சமற்கிருதம் ஆகியவற்றைத் திணித்து மெல்லத் தமிழை அழித்தொழிக்கும் பார்ப்பனியச் சதி முயற்சிகளை முறியடிப்பதில் இது தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. இந்தியையும் சமற்கிருதத்தையும் வெளிப்படையாகத் தமிழர்கள்மீது திணிக்கும் முயற்சியைத் திராவிடம் தடுத்திராவிட்டால், எப்போதோ தமிழினம், இந்தி பேசும் இனமாக மாறியிருக்கும். அவ்வாறின்றி, இன்று மொழிஉணர்வும் இன உணர்வும் தமிழர்களிடையே மேலோங்கியிருப்பதற்கும்; தமிழ்த்தேசியம் என்னும் மொழிவழித் தேசிய அரசியல் வெகுமக்களின் உரையாடலுக்குட்பட்ட ஒன்றாகப் பரிணாமம் அடைந்திருப்பதற்கும்; திராவிடத்தின் தாக்கமே முதன்மையான காரணியாகும். அதாவது, திராவிடம் என்பது தமிழ்த்தேசியத்துக்கு எதிரானது அல்ல. மாறாக, ‘பார்ப்பனிய தேசியவாதம்‘ அல்லது ‘இந்துத்துவா’ என்னும் ‘சங்பரிவார்களின் மதவழித் தேசியவாதத்துக்கு’ எதிரானது ஆகும்.

**பார்ப்பனிய தேசியவாதம்**

‘சனாதனச் சக்திகளான ‘பார்ப்பன பனியா’ என்னும் உயர்சாதி மற்றும் உயர்வருண அடிப்படையிலான ‘கூட்டு மேலாதிக்க இந்துப் பெரும்பான்மைவாதம்’; ‘இந்தி சமற்கிருதம்’ என்னும் அடிப்படையிலான ‘உயர்சாதி மொழிவழித் தேசியவாதம்’ மற்றும் ‘இந்துஸ்தான் அல்லது இந்துராஷ்ட்ரா’ என்னும் ‘மதச் சார்பு அரசுவழி தேசியவாதம்’ஆகியவையே இந்துத்துவா தேசியவாதம் அல்லது

பார்ப்பனிய தேசியவாதமாகும். இத்தகைய தேசியவாதத்தின் அடிப்படையில், இந்தியாவின் மாநிலங்கள் அனைத்தையும் 'ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம்' கொண்ட 'ஒரே தேசமாக' மாற்றி அமைத்திட, அதன்மூலம் தேசத்தின் பன்மைத்துவத்தைச் சிதைத்திட, பிற்போக்குச் சக்திகளான வலதுசாரிகள் முயற்சிக்கிற போதெல்லாம், அதனை முறியடிக்கும் வகையில் போராடுகிற போர்க்குணம் கொண்ட முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்கிவருகிது.

### கொள்கைப் பகைவர்களின் சதிமுயற்சிகள்

இந்தியாவெங்கிலும் இந்திமயமாக்கல், சமற்கிருதமயமாக்கல், சனாதனமயமாக்கல், கார்ப்பரேட்மயமாக்கல் போன்ற புதுதில்லி ஆட்சியாளர்களின் பேராதிக்கப் போக்குகளை எதிர்த்து, இன்றும் தமிழ்நாடு சமரசமின்றிக் குரலெழுப்பி வருகிறது. இத்தகைய இடதுசாரி முற்போக்குச் சிந்தனைகள் தழைப்பதற்கு இம்மண்ணில் ஆழ வேர் பிடித்துள்ள 'திராவிட அரசியலே' காரணம் ஆகும். ஆகவேதான், திராவிட அரசியலைக் குறிவைத்து அதனைத் தகர்த்தெறிவதற்குப் பலரும் வரிந்து கட்டிக் கொண்டு களமிறங்கியுள்ளனர். பண்டிதர் காலம் தொடங்கி பெரியார், அண்ணா, கலைஞர் என தற்போதைய காலம் வரையில், கொள்கைப் பகைவர்களின் இத்தகைய சதிமுயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

சனாதன சக்திகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும், தமிழ்மண்ணில் நிலைபெற்றுள்ள,வலுப்பெற்றுள்ள சமூகநீதி என்னும் திராவிட அரசியலுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளவர்களில் சிலர் வெவ்வேறு முகமூடிகளை அணிந்து கொண்டு திராவிடத்துக்கு எதிரான திரிபுவாத அரசியலைப் பரப்பி வருகின்றனர். சனாதனச் சக்திகளின் நெடுங்காலச் செயல்திட்டத்துக்கு ஏதுவாக இவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

சிலர் பெரியாரின் சிந்தனைகளை ஆதரிக்கிறவர்களாகவும் அதேவேளையில் சனாதனிகளின் நோக்கங்களுக்குத் துணை போகிறவர்களாகவும் செயல்படுகின்றனர். சிலர், பெரியாரின் அரசியல்தான் தமிழ்த்தேசியம் வளர்வதற்குத் தடையாக உள்ளது என்று வெளிப்படையாகப் பேசி, பெரியாரின் பிம்பத்தைச் சிதைப்பதில் தீவிரம் காட்டுகின்றனர்.

பெரியார் என்னும் அடையாளம்தான் இங்கேசனாதன எதிர்ப்பின் அடையாளமாக உள்ளது. எனவே, பெரியாரின் பிம்பத்தை நொறுக்க வேண்டுமென்று பல பத்தாண்டுகளாக முட்டி மோதி, முக்கித் திணறிக் கொண்டிருக்கும் வகையறாக்கள், இன்று பார்ப்பனரல்லாத, 'தமிழ் – தமிழர் – தமிழ்நாடு' என்னும் பெயரில் அரசியல் பேசும் தமிழர்களைக் கொண்டே எதிர்க்கும் உத்தியைக் கையாளுகின்றனர். இப்போது நாம் எதிர்கொள்ள வேண்டிய முதன்மையான சவால்களில் இதுவும் ஒன்றாக உள்ளது. தமிழ்நாட்டின் இத்தகைய போர்க்குணம் வாய்ந்த முற்போக்கான கருத்தியல் சிறப்புகளுக்கு தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞரின் பங்களிப்பும் மகத்தானதாகும்.

### திராவிடத்துக்கு எதிராகக் களமிறங்கியுள்ள பார்ப்பனரல்லாத திரிபுவாதக் கும்பல்

மனுநெறிகளுக்கு மாற்றாக குறள் நெறிகளை உயர்த்திப் பிடித்து இங்கே சமத்துவத்தை நிலைநாட்டப் போராடியவர் கலைஞர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கிற அய்யன் திருவள்ளுவரின் கோட்பாட்டையே தனது ஆட்சி நிர்வாகத்தின் தலையாய கோட்பாடாக முன்னிறுத்தியவர் கலைஞர். ஆகவேதான், அவரையும் அவரது கருத்தியல் பேராசான் தந்தை பெரியாரையும் சனாதன சக்திகள் தமது முதன்மைப் பகைவர்களாக முன்னிறுத்தி அவர்கள்மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள மதிப்பையும் நம்பகத் தன்மையையும் சீர்குலைப்பதில், தகர்ப்பதில் குறியாக உள்ளனர். அவர்கள் மட்டுமின்றி, அதே வேலைத் திட்டங்களுடன் திராவிடத்துக்கு எதிராகக் களமிறங்கியுள்ள பார்ப்பனரல்லாத திரிபுவாதக் கும்பலும் பெரியாரையும் கலைஞரையும் பகைவர் களாக முன்னிறுத்துவதில் குறியாக உள்ளனர். வழக்கம்போல

வெளிப்படையாக நம்மோடு மோதும் சனாதன ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவா சக்திகளையும்; நம்மைப் போலவே வேடமிட்டு நம்முடைய முகாமிலேயே நின்று இந்துத்துவா அரசியலைப் பேசும் சக்திகளையும்; தமிழ்த் தேசியத்துக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்தத்தில் மொழிவழித் தேசியத்துக்கே எதிரான மதவழித் தேசிய சங்பரிவார் கும்பலை எதிர்க் காமல், திராவிடமே முதல் எதிரி என திரிபுவாதம் பேசி பார்ப்பனிய தேசிய வாதத்துக்குத் துணை போகும் சக்தி களையும்; சம காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய பொறுப்பு இன்று அனைத்து சனநாயகச் சக்திகளுக்கும் உள்ளது. இது காலத்தின் தேவையாகவும் வரலாற்றுக் கட்டாயமாகவும் உள்ளது.

சனநாயகத்தைப் பாதுகாக்கும் சமத்துவத்தை வென்றெடுக்கும் நோக்கிலான இந்தப் போர்க் களத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் கருத்தியல் போர்வாளான 'முரசொலி' இதழ் தொடர்ந்து பெரும் பங்காற்றி வருகிறது. அதன் பணிகள் மென்மேலும் சிறந்தோங்க, வெற்றி பெற எமது மனம் நிறைந்த வாழ்த்துகள். அனைவருக்கும் இனிய தமிழர் திருநாள் – பொங்கல் பெருநாள் வாழ்த்துகள்.

**நன்றி: முரசொலி**
**பொங்கல் மலர், 2026**



**டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தலைமைச் செயலக எஸ்.சி/எஸ்.டி, அலுவலர்கள் நலச்சங்கம் முதலாம் ஆண்டு விழா 03.01.2026 அன்று சென்னை கீழ்ப்பாக்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தார் எழுச்சித்தமிழர்.**



**விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொழிலாளர் விடுதலை முன்னணியின் சார்பில் 23.12.2025 அன்று பா.ச.க அரசின் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார் எழுச்சித்தமிழர்.**



**சென்னை மயிலாப்பூர் பகுதியில் உடல் நலக்குறைவால் மறைந்த ஆடிட்டர் ரஜினிகாந்த் அவர்களின் தந்தை உடலுக்கு 01.01.2026 அன்று மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் எழுச்சித்தமிழர்.**

அரசு ஊழியர்களுக்குப் புதிய ஓய்வூதியத் திட்டம்:

# மாண்புமிகு முதலமைச்சரின் மகத்தான அறிவிப்பை வரவேற்கிறோம்!

## முனைவர் தொல்.திருமாவளவன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டி வரவேற்கிறோம். சுமார் ஒன்பது லட்சம் அரசு ஊழியர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்துள்ள இந்த அறிவிப்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒன்றிய பா.ஜ.க அரசு பதவி ஏற்றதில் இருந்து அரசு ஊழியர்கள்மீதும், தொழிலாளர்கள்மீதும் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது. முன்பிருந்த ஓய்வூதியத் திட்டம் ஒன்றிய அரசால் ரத்து செய்யப்பட்டு ஊழியர்களின் பங்களிப்போடு கூடிய புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. பா.ஜ.க ஆளும் மாநில அரசுகள் உடனடியாக அதை நடைமுறைப்படுத்தின. தமிழ்நாட்டில் அப்போதிருந்த செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் இருக்கும் சுமார் ஒன்பது லட்சம் அரசு ஊழியர்களில் 6 லட்சம் பேர் புதிய ஓய்வூதியத் திட்டத்திலும், 3.15 லட்சம் பேர் பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழும் இருந்தனர். பா.ஜ.க அரசு கொண்டுவந்துள்ள தேசிய ஓய்வூதியத் திட்ட நிதியின்கீழ் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நிதியை அது முதலீடு செய்யவில்லை. அதற்கு மாறாக அது எல்.ஐ.சி.யில் முதலீடு செய்தது. எல்.ஐ.சி.யும் முழுமையாகத் தனியார்மயம் ஆக்கப்படுவதாக மோடி அரசாங்கம் சட்டம் இயற்றியுள்ள நிலையில் அதில் முதலீடு செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் சேமிப்புத் தொகைக்கும் எந்தப் பாதுகாப்பும் இல்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படி நடக்குமென்ற அச்சத்தினால்தான் தங்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று அரசு ஊழியர்கள் போராடினார்கள். 2021 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்தக் கோரிக்கையைத் தாயன்போடு பரிசீலித்து இப்போது நிறைவேற்றித் தந்திருக்கிறார்.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தில் ஒரு அரசு ஊழியர் கடைசியாகப் பெறும் ஊதியத்தில் 50 சதவிகிதத்தை ஓய்வூதியமாகப் பெறுவார். ஓய்வூதியம் பெறுபவர் இறந்துவிட்டால் அந்த ஓய்வூதியத் தொகையில் 60 சதவிகிதத்தை அவரது இணையர் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுவார். அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அகவிலைப் படியும் ஓய்வூதியகாரர்களுக்கு உயர்த்தி வழங்கப்படும். ஓய்வுபெறும் போது கிடைக்கும் தொகை 25 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக் காலத்தை நிறைவு செய்யவில்லை என்றாலும் அதற்கிடையில் ஓய்வு பெறுபவர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் இந்தத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கருணைத்தொகை வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டுக்கான நிதியைக் கொடுக்காமல் வஞ்சிக்கிற நேரத்திலும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் செலவைக் கூடுதலாக ஏற்று இந்த ஓய்வூதியத் திட்டத்தை முதலமைச்சர் அறிவித்திருப்பது அவர் எந்த அளவுக்கு அரசு ஊழியர்களின்மீது அக்கறை கொண்டிருக்கிறார் என்பதற்குச் சான்றாக உள்ளது.

தமிழ்நாடு அரசின் மொத்த வரி வருவாயில் சுமார் 15 சதவிகிதம் ஓய்வூதியத்திற்காகச் செலவிடப்படுகிறது. 2020 - 21ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்கான ஊதியமும் ஓய்வூதியமும் சேர்த்து ஒரு லட்சத்து 74 ஆயிரம் கோடி ரூபாயைத் தமிழ்நாடு அரசு செலவிட்டது. இப்போது அந்தத் தொகை மேலும் அதிகரித்திருக்கும். இதனால், பொருளாதாரச் சுமை தமிழ்நாடு அரசுக்குக் கூடுதலாக ஆகும். இந்தச் சிரமங்கள் எல்லாம் இருந்த போதிலும் அரசு ஊழியர்களின் நலன் கருதி மகத்தான அறிவிப்பை முதலமைச்சர் வெளியிட்டு இருக்கிறார். தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் இந்த அறிவிப்புக்கு நன்றி செலுத்தும் விதமாக இந்த அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முழுமையாக ஈடுபட வேண்டுமென்றும், மீண்டும் இந்த நல்லாட்சி அமைந்திட ஆதரவு தர வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறோம்.

**அறிக்கை | 04.01.2026**

**கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்**

# வெறுப்பு அரசியலுக்கு எதிரானது கிறிஸ்தவம்! சனாதன சக்திகளின் வெறுப்பு அரசியலை வீழ்த்திட சகோதரத்துவத்தை வலுப்படுத்திட கிறிஸ்துமஸ் பெருநாளில் உறுதியேற்போம்!

## முனைவர் தொல்.திருமாவளவன்

இயேசு பெருமான் பிறந்தநாளில் கிறிஸ்தவப் பெருங்குடி மக்கள் யாவருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எமது இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இயேசு பெருமானின் போதனைகள் வெறுப்பு அரசியலுக்கு எதிரானவை. உயர்வு - தாழ்வு என்னும் பாகுபாட்டுக்கு எதிரானவை. சாதி, மதம், மொழி, இனம், தேசம் போன்ற அடையாளங்களுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் சகோதரத்துவத்தால் இணைக்கக்கூடியவை. ஆகவே தான், கிறிஸ்தவம் உலகமெங்கும் பரவி இன்றும் வெற்றிகரமாக மனிதகுலத்தை வழிநடத்தி வருகிறது.

இயேசு பெருமான் சகோதரத்துவத்தின் அடையாளமாகும். எனவே அவரைப் போற்றுவது என்பது சகோதரத்துவத்தைப் போற்றுவதேயாகும். சகோதரத்துவம் தழைக்குமிடத்தில்தான் சனநாயகம் கோலோச்சும். சனநாயகமும் சமத்துவமும் ஒரே நேர்க்கோட்டில் அமைந்துள்ள வெவ்வேறு புள்ளிகளாகும். இவற்றுக்கு அடிப்படையானதொரு கருத்தியல்தான் சகோதரத்துவம் என்பதாகும். அத்தகைய சகோதரத்துவத்தை தமது உயிர்மூச்சாகக் கொண்டதே இயேசு பெருமானின் கிறிஸ்தவம் ஆகும்.

இத்தகு சிறப்புக்குரிய கிறிஸ்தவத்தை, உலகெங்கும் வாழும் மக்களுக்கு அருட்கொடையாக வழங்கியுள்ள மகத்தான பேராளுமையே இயேசு பெருமான் ஆவார். அவரை நினைவுகூர்ந்து இந்நாளில் அவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உள்ளது. அதாவது, உலகமெங்கும் சகோதரத்துவத்தை மென்மேலும் வளர்த்தெடுக்கவும் வலுப்படுத்தவும் இந்த நன்னாளில் யாவரும் உறுதியேற்போம். சகோதரத்துவத்தைப் போற்றும் யாவருக்கும் எனது மனம் நிறைந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்.

**அறிக்கை |24.12.2025**




சி.பி.ஐ (எம்.எல்) லிபரேசன்
மாநாடு | தூத்துக்குடி

# அம்பேத்கர் இயக்கங்களை இடதுசாரிமயப்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது!

**எழுச்சித்தமிழர் உறுதி**

**தூத்துக்குடியில் 12.12.2025 அன்று சி.பி.ஐ (எம்.எல்) லிபரேசன் கட்சியின் மாநில மாநாடு 'வாக்குத் திருட்டைத் தடுத்திடுவோம்! தொழிலாளர் அடிமைச் சட்டத்தைத் தகர்த்திடுவோம்!' என்னும் முழக்கத்தோடு நடைபெற்ற மாநாட்டில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

எஸ்.ஐ.ஆர் என்கிற நடவடிக்கையை எதிர்க்கிற வகையில் வாக்குத் திருட்டைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்துகிற வகையில் தொழிலாளர்களுக்கு விரோதமாகக் கொண்டு வந்திருக்கிற தொகுப்புச் சட்டங்களை எதிர்க்கிற வகையில் இந்த மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சி.பி.ஐ (எம்.எல்) லிபரேசன் கட்சி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என்று நாம் அனைவரும் ஒருசேர நின்று தொழிலாளர் விரோதத் தொகுப்புச்சட்டங்களை எதிர்த்துப் போராடியிருக்கிறோம்; குரல் கொடுத்திருக்கிறோம். நாடு தழுவிய அளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு தம்முடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் எனக்குப் பேசுகிற வாய்ப்புக் கிட்டியது. எஸ்.ஐ.ஆர் குறித்து மிகக்கடுமையாக



எதிர்ப்பைப் பதிவு செய்தேன். 'இது தேசத்திற்கு விரோதமானது, அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது, வாக்குரிமையை மட்டும் பறிப்பதாக இல்லாமல் குடியுரிமையைப் பறிக்கிற ஒரு செயல். இதைக் கைவிட வேண்டும் என்பதோடு வாக்குரிமையை அடிப்படை உரிமையாக ஆக்கவேண்டும். இது புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் நிர்ணய சபையில் முன்மொழிந்த ஒரு கோரிக்கை. அதனை இன்றைக்கு நான் வழிமொழிகிறேன்' என்று உரையாற்றினேன். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் அரசமைப்புச் சட்டத்தை வரையறுப்பதற்கு முன்பாக அரசியல் நிர்ணய சபையில் உரையாற்றிய போது, "வாக்குரிமையை எதிர்காலத்தில் பறிக்கும் சூழல் வரும்" என்கிற அச்சத்தைப் பதிவுசெய்திருக்கிறார். ஏழை – எளிய மக்களுக்கான ஒரே இருப்பு, அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒரே ஆயுதம் வாக்குரிமை தான்.

### வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை

வட்டமேசை மாநாட்டில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களும், தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் அவர்களும் 'வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை' வேண்டுமென்று கோரிக்கை எழுப்பினார்கள். 1930, 1931, 1932 ஆகிய காலகட்டங்களில் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டின் போது, வாக்குரிமை அனைவருக்கும் இல்லை. பட்டா உள்ளவர்களுக்கும், பட்டம் படித்தவர்களுக்கும்தான் வாக்குரிமை இருந்தது. சனநாயகம் ஒரு எல்லையோடு நின்றுபோனது. சொத்து உள்ளவர்களுக்கும், கல்வி கற்றவர்களுக்கும் தான் வாக்குரிமை வழங்கப்பட்டு வந்த காலம் அந்தக் காலம். ஆனால், 18 வயது நிரம்பிய யாவருக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும். அவர்கள் சொத்து உள்ளவர்களாக இருந்தாலும், இல்லாதவர்களாக இருந்தாலும், கல்வி கற்றவர்களாக இருந்தாலும், கல்லாதவர்களாக இருந்தாலும் 18 வயது நிரம்பிய உடன் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கவேண்டும் என்கிற கோரிக்கையை வட்டமேசை மாநாட்டில் எழுப்பியவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள். அவரைத் தொடர்ந்து அந்தக் கருத்தை வலியுறுத்தியவர் ரெட்டைமலை சீனிவாசன். அப்படியெல்லாம் வாதாடி, போராடிப் பெற்ற வாக்குரிமை என்பதுதான் இன்றைக்கு ஏழை–எளிய பாட்டாளி வர்க்கம், குறிப்பாக, சேரி மக்கள் வசிக்கக்கூடிய வாழ்விடத்திற்கு அரசியல் கட்சித் தலைவர்களையெல்லாம் வரவழைத்தது.

இந்த வாக்குரிமை மட்டும் இல்லையென்றால், சேரிப் பக்கம் எவரும் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டார்கள், அந்த வாசலுக்கு எவரும் வரமாட்டார்கள். அவர்களை ஒரு மனிதனாக மதிக்க மாட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து புறக்கணிக்கின்ற நிலை, ஒதுக்குகிற நிலை நீடித்திருக்கும். இன்றைக்கு அந்தப் பகுதியை நோக்கி அனைவரும் அடியெடுத்து வைக்கிறார்கள்; அவர்களையும் மதிக்கிறார்கள்; கையெடுத்துக் கும்பிடு கிறார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம் அவர்களின் கைகளில் இருக்கிற வாக்குரிமை என்கிற ஆயுதம்தான். அந்த வாக்குரிமையைப் பறித்து மறுபடியும் அவர்களை ஒடுக்குகிற ஒரு மறைமுகத் தாக்குதல்தான் இந்த எஸ்.ஐ.ஆர் என்று அம்பேத்கரின் பார்வை யிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

### ஒரு கோடி வாக்காளர்கள் நீக்கப்படும் நிலை

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுமேயானால் எவ்வளவு தீவிரமாக நாமும் சேர்ந்து அதிகாரிகளோடு உழைத்து எல்லோரையும் பதிவு செய்ய வேண்டுமென்று விரும் பினாலும்கூட கிட்டத்தட்ட ஒரு கோடி பேர் வாக்குரிமையை இழக்கும் நிலை ஏற்படும். அந்தப் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்படுகிற சூழல் உருவாகும். 80 இலட்சத்திலிருந்து 1 கோடி பேர் வரையில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுகிற நிலை இயல்பாக வந்து அமையும். அப்படி நீக்கப்படுகிறவர்கள் யாராக இருப்பார்கள்? பா.ச.க ஆளும்கட்சித் தரப்பிலிருந்து பேசுகிற ஒவ்வொருவரும் தொடர்ந்து சொல்கிற கருத்து என்னவென்றால், அண்டை நாடுகளிலிருந்து ஊடுருவியவர்கள்



இங்கே ஆதார் அட்டையைப் பெறுகிறார்கள். வாக்காளர் அட்டையைப் பெறுகிறார்கள். எல்லாச் சலுகைகளையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி நாம் வாக்களிக்கும் உரிமையைத் தர முடியும்? ஆகவே, அவர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து வெளியேற்றுவதற்குத்தான் எஸ்.ஐ.ஆர் என்கிற நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொண்டிருக்கிறது என்கிற கருத்தைப் பதிவு செய்கிறார்கள்.

**எஸ்.ஐ.ஆரை நடத்த வேண்டிய தேவை என்ன?**

தமிழ்நாடு உட்பட 12 மாநிலங்களில் இதை நடத்துகிறார்கள். ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட சங்பரிவார்களுக்கு ஒரு நீண்டநெடிய தொலைநோக்குத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒவ்வொரு உத்தியாகக் கையாண்டு வருகிறார்கள். அவர்களின் உண்மையான எதிரிகள் தேர்தல் களத்தில் காங்கிரஸ் கட்சி. கொள்கைக் களத்தில் கம்யூனிஸ்ட்டுகள். கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத பாரதம். காங்கிரஸ் இல்லாத பாரதம். இதுதான் பா.ச.க.வின் முக்கியமான செயல்திட்டம். இந்த இரண்டு வகையான அரசியல் கட்சிகளை அழித்தொழிக்க வேண்டும்; தேசிய அளவில் இது இருக்கவே கூடாது; இதுதான் அவர்களின் நோக்கம். பல கட்சிகள் இயங்குவது அவர்களுக்கு உடன்பாடு இல்லை.

இங்கே மொழிவழித் தேசிய அடிப்படையில் மக்களை ஒருங்கிணைக்க முடியாது. பாட்டாளி வர்க்க அடிப்படையில் இங்கே மக்களை ஒருங்கிணைக்க முடியாது. அந்த அளவுக்கு சாதி வேரூன்றிக் கிடக்கிறது, புரையோடிக் கிடக்கிறது. மனிதர்கள் சிதறிக் கிடக்கிறார்கள். தனித்தனி நபர்களாக வைத்திருக்கிறது. இவர்களை ஒருங்கிணைப்பது கடினம். இந்த நிலையில் 'நாடாளுமன்ற சனநாயக வழியில் இங்கே ஒரு அரசை நிறுவ முடியும். அந்த அரசின் வழியில் சோசியலிசத்தை மலரச் செய்வதற்கு முடியும்' என்று நம்பியவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள். அவரும் சோசியலிசவாதி தான். சோசியலிசத்தின்மீது நம்பிக்கை கொண்டவர்தான். அதை மலரச் செய்ய வேண்டும் என்கிற வேட்கை கொண்டவர் தான். ஆனால், 'Parliamentary Democracy' என்பதுதான் அதற்கான வழியென்று நம்பியவர். அந்த அடிப்படையில்தான் அரசமைப்புச் சட்டத்தை வகுத்தளித்தார். அந்த பாராளுமன்ற சனநாயகத்தின் உயிர்மூச்சு எங்கே இருக்கிறது என்றால் வாக்குரிமையில் இருக்கிறது. பாராளுமன்ற சனநாயகத்தின் உயிர்மூச்சு எதுவென்றால், வாக்குரிமை. அந்த வாக்குரிமையைப் பறிப்பது எவ்வளவு பெரிய மக்கள் விரோதச் செயல்.

**எதற்காக மண்ணின் மைந்தர்களின் வாக்குரிமையைப் பறிக்கிறீர்கள்?**

எதிர்ப்பவர்களின் வாக்குகளையெல்லாம் தடுக்க வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் 80 இலட்சம் பேரோ அல்லது 70 இலட்சம் பேரோ, குறைந்தது ஐந்து இலட்சம் பேரோ வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் நிலை உருவானால் அந்த 50 இலட்சம் பேரில் குறைந்தது யாராக இருப்பார்கள். ஒரு யூகம் செய்து பாருங்கள். யாராக இருக்க முடியும். அதில் பெரும்பான்மையாக தலித்துகள் தான் இருப்பார்கள். ஏழை–எளிய மக்கள் தான் இருப்பார்கள். இவர்கள் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை.

இந்தியாவில் இருக்கிற எதார்த்தமான உண்மை இது. இன்றைக்கு இந்தியாவும், 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளும் உயிர்ப்போடு இருப்பதற்கு எந்த வாக்குவங்கி பயன்படுகிறது என்றால், தலித்துகளின் வாக்குவங்கி, பழங்குடிகளின் வாக்குவங்கி, சிறுபான்மைச் சமூகத்தினரின் வாக்குவங்கி, இந்த விளிம்புநிலை மக்களின் வாக்குவங்கிதான். இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கிற 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளுக்கு உயிரைத் தந்து கொண்டிருக்கிறது. இவர்கள் எப்போதும் வாக்களிக்கப் போவதில்லை என்று அவர்கள் தெளிவாக முடிவெடுத்துவிட்டார்கள்.

**அம்பேத்கரை விமர்சிக்க முடியாது**

பெரியாரை விமர்சிப்பதைப் போல நேரிடையாக அம்பேத்கரை விமர்சிக்க



முடியாது; நேரிடையாக அரசமைப்புச் சட்டத்தை எதிர்க்க முடியாது. அப்படி எதிர்த்தால் அது அம்பேத்கரை எதிர்ப்பதாகப் போய் முடியும். அம்பேத்கர் வகுத்தளித்த அரசமைப்புச் சட்டம் என்பதனால் அதை நேரிடையாக அவர்களால் விமர்சிக்க முடியவில்லை. அரசமைப்புச் சட்டத்தைத் தொட்டு வணங்குகிறார்கள். 'அம்பேத்கர் ஜெயந்தி'யின் போது அவரது சிலையைத் தொட்டுக் கும்பிடுகிறார்கள். அவருடைய நினைவுநாளில் வீரவணக்கம் செலுத்துகிறார்கள்.

அவரைப் புகழ்ந்து பேசுகிறார்கள்; அவர் பிறந்த இடத்தை நினைவிடமாகப் பார்க்கிறார்கள். லண்டனில் கல்வி கற்ற இடத்தை வாங்கி நினைவிடமாக மாற்றுகிறார்கள். மும்பையில் உலகிலே உயர்ந்த சிலை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால், அவர் வகுத்தளித்த அரசமைப்புச் சட்டத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சியாளர் அம்பேத்கருக்கு சிலை எழுப்பிக் கொண்டிருக்கிறார்; அவர் உருவாக்கிய அரசமைப்புச் சட்டத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய கருத்தியலைச் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் இங்கே நடந்துகொண்டிருக்கிறது. அவர்களின் இறுதி இலட்சியம் இந்த அரசு ஒரு மதம் சார்ந்த அரசாக இருக்கவேண்டும் என்பதுதான்.

### மனுஸ்மிருதியை இந்தியாவின் அரசமைப்புச் சட்டமாக மாற்றுவதே நோக்கம்

அரசுக்கு ஒரு மதம்; அது இந்து மதம். அது நிலையாக இருக்க வேண்டும் என்பதுதான். அதை வெளிப்படையாக அவர்களால் அறிவிக்க முடியவில்லை. அதற்கான அரசியல் வலிமை அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. மாநிலங்களவையில் இன்னும் அவர்கள் பிறகட்சி தலைவர்களோடுதான் சட்ட மசோதாவை நிறைவேற்றக்கூடிய நிலை இருக்கிறது. மக்களவையில் அவர்கள் தனிப்பெரும்பான்மையாக இருந்தாலும் எதிர்ப்பே இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு எம்.பி இருக்கக்கூடிய கட்சிகளுக்கும் மந்திரி பதவியைக் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் அவர்கள் கையாளுகிற உத்திகள். எதிர்காலத்தில் இந்த அரசமைப்புச் சட்டத்தைத் தூக்கியெறிந்துவிட்டு மனுஸ்மிருதியை இந்தியாவின் அரசமைப்புச் சட்டமாக மாற்றம் செய்து அமைப்பதுதான், அறிவிப்பதுதான் அவர்களின் நோக்கம்.

### உயர்த்திப் பிடிக்கப்படும் வலதுசாரி அரசியல்

எல்லாவற்றையும் வலதுசாரிமயமாக்கி வருகிறார்கள். வலதுசாரி அரசியலை உயர்த்திப் பிடிக்கிறார்கள். சாதி உணர்வைத் தூண்டுகிறார்கள். சாதிப் பெருமையைப் பேசவைக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒவ்வொரு சாதிக்குள்ளும் ஊடுருவி, ஊடுருவி ஒவ்வொரு

சாதிக்குழுவாக ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட சங் பரிவார் அமைப்புகளின் துணையோடு வலதுசாரி மயப்படுத்தி வருகிறார்கள். நாடார் சமூகத்தில் ஊடுருவி அந்தச் சமூகத்தில் பல தலைவர்களை உருவாக்கி, அதிகார வலிமை உள்ளவர்களாக்கி அவர்கள் இன்றைக்கு அந்தச் சமூகத்தை ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட சங்பரிவார்களுக்கான சமூகமாக மாற்றி வளர்த்தெடுத்து வருகிறார்கள். அடுத்து, முக்குலத்தோர், கவுண்டர், தலித்துகளில் முக்கியமான மூன்று பிரிவுகளில் இரண்டு பிரிவுகள் இப்படி ஒவ்வொரு சமூகக் குழுக்களையும் தனித்தனியே அணுகி அவர்களின் தேவைகளை மதம் சார்ந்த அடிப்படையில் அணுகுகிறார்கள்.

**“**

**அம்பேத்கர் இயக்கங்களோடு இணைந்து நின்று அம்பேத்கர் இயக்கங்களின் அரசியலை இடதுசாரிமயப்படுத்த வேண்டிய பொறுப்பு கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொறுப்பு. அதைச் செய்யாமல் அவர்கள் சாதிச்சங்கம் என்று விலகி நிற்பது பெரும் தவறு, அது பெரும்பிழை.**

### இடதுசாரிகள் ஒருங்கிணைந்து நிற்க வேண்டிய தேவை

மதுரையில் நெசவாளர்களின் பிரச்சினைகளுக்காகப் போராடவில்லை; ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையை விரைந்து கட்டிமுடியுங்கள் என்று போராடவில்லை; புதிய தொழிற்சாலைகளைக் கொண்டு வாருங்கள், தென்மாவட்டங்களைத் தொழில்வளம் மிக்க மாவட்டங்களாக மேம்படுத்துங்கள் என்று போராடவில்லை; சாதிய வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடவில்லை; எல்லோருக்கும் வீடு வேண்டுமென்று போராடவில்லை; எல்லோருக்கும் மனைப்பட்டா வேண்டுமென்று போராடவில்லை; இந்த எளிய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்குக் கல்வி உதவித்தொகை வேண்டுமென்று போராடவில்லை; கல்விக்கடன் வேண்டுமென்று போராடவில்லை; அயல் நாடுகளுக்குப் படிக்க அனுப்ப வேண்டுமென்று அவர்கள் போராடவில்லை; கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டுமென்று போராடுகிறார்கள். மத உணர்ச்சியைப் பயன்படுத்தி அவர்களைத் தூண்டிவிட்டு ஒருங்கிணைக்கப் பார்க்கிறார்கள். யோசித்துப் பாருங்கள் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் இப்படித்தான்.

இப்படிப்பட்ட இந்த ஆபத்தான சூழலில் பெருந்தீங்கு விளையக் கூடிய இந்தச் சூழலில் இடதுசாரிகள் மிகவும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டிய தேவையிருக்கிறது, ஒன்றிணைய வேண்டிய தேவையிருக்கிறது, தீவிரமாகக் களமாட வேண்டிய தேவையிருக்கிறது. இடதுசாரி அரசியல் என்பது கம்யூனிஸ்ட் கட்சிகளோடு நின்றுவிடக்கூடிய ஒன்றல்ல; அது விரிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்று. அது அம்பேத்கர் இயக்கங்களோடும் திராவிட இயக்கங்களோடும் விரிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்று. திராவிட இயக்கங்களுக்குள் இடதுசாரி அரசியலைப் பரப்ப வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அம்பேத்கர் இயக்கங்களோடு இணைந்து கலந்து போராடுவதன் மூலமாக அம்பேத்கர் இயக்கங்களை இடதுசாரிமயப்படுத்த வேண்டிய தேவையிருக்கிறது.

### அம்பேத்கர் இயக்கங்களின் அரசியலை இடதுசாரிமயப்படுத்த வேண்டிய பொறுப்பு

நான் ஒவ்வொரு முறையும் பேசுவதுண்டு, கம்யூனிஸ்ட்டுகள் அம்பேத்கர் இயக்கங்களை சாதிச் சங்கங்களாகப் பார்த்துப் புறந்தள்ளி விலகி நிற்கிற காலமாக அந்தக் காலம் இருந்தது. அம்பேத்கர் இயக்கங்களோடு இணைந்து நின்று

அம்பேத்கர் இயக்கங்களின் அரசியலை இடதுசாரிமயப்படுத்த வேண்டிய பொறுப்பு கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொறுப்பு. அதைச் செய்யாமல் அவர்கள் சாதிச்சங்கம் என்று விலகி நிற்பது அவர்களை அப்படியே அனுமதிப்பதாக ஆகிவிடுகிறது. அது பெரும் தவறு, அது பெரும்பிழை.

எனவே, இடதுசாரிமயப்படுத்துதல், அதிலும் முக்கியமானது அந்த அரசியலை கம்யூனிஸ்ட் கட்சிகளோடு நின்றுவிடுவதல்ல, முடங்கிவிடுவதல்ல, நிலைப்படுத்திவிடுவதல்ல; அது விரிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்று. தேசிய அளவில் விரிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்று. தற்காலிகமாக தேர்தல் அரசியலில் நாம் பெறுகிற தோல்வி பெரிதல்ல. கருத்தியல்ரீதியாக இந்தக் களத்தில் நாம் பெறுகிற வெற்றிதான் முதன்மையானது. இடதுசாரி அரசியலை எந்த அளவுக்கு வெகுமக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்கிறோம், இந்து மதம் சார்ந்த அரசியலை அம்பலப்படுத்துகிற பணிகளை எந்த அளவுக்கு நாம் தீவிரப்படுகிறோம் என்பதில்தான் நம்முடைய வெற்றி அடங்கியிருக்கிறது. தி.மு.க.வோடு சேர்வது அல்லது அ.தி.மு.க.வோடு சேர்வது என்பது வெறும் தேர்தலுக்காக என்று கருதக்கூடாது. அந்த இயக்கங்களைப் பின்பற்றக்கூடியவர்களை இடதுசாரிமயப்படுத்த வேண்டிய கடமையை அங்கே நாம் பார்க்கவேண்டும். அந்தப் பொறுப்பு நமக்கு இருக்கிறது. அங்கேயும் இந்த அரசியல் வெகுவாகப் பரவ வேண்டும்.

**அ.தி.மு.க நீர்த்துவிடக் கூடாது; அது வலிமை இழந்துவிடக் கூடாது**

எஸ்.ஐ.ஆர்.ஐ எதிர்ப்பதில் இன்றைக்கு நாம் காட்டுகிற தீவிரத்தை தி.மு.க., அ.தி.மு.க போன்ற கட்சிகள் வெகுவாகக் காட்டினால் எவ்வளவு பெரிய எதிர்ப்பாக அது மாறும். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு எவ்வளவு பெரிய ஒரு வலிமையாக அது மாறும். அ.தி.மு.க., பா.ச.க.வோடு சேர்ந்திருப்பதால் அதை நாம் புறந்தள்ளிவிடக் கூடாது. அ.தி.மு.க.வையும் இந்த மண்ணில் ஒரு இடதுசாரி அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கமாகத்தான், பெரியாரின் அரசியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய ஒரு இயக்கமாகத்தான் நாம் அணுக வேண்டியிருக்கிறது. ஆகவேதான், சில நேரங்களில் நான் தொடர்ந்து சொல்வதுண்டு. அ.தி.மு.க நீர்த்துவிடக் கூடாது; அது வலிமை இழந்துவிடக் கூடாது என்று சொல்வதற்குக் காரணம் அதுதான்; வேறெந்த நோக்கமும் கிடையாது. எந்த அரசியல் பணியும் இல்லை. எந்த அடிப்படைப் பணிகளும் இல்லை.

**வலதுசாரி அரசியலை வீழ்த்தும் வரை நாம் ஓய்ந்துவிடக் கூடாது**

தி.மு.க என்கிற கட்சியின்மீது விமர்சனம் செய்வது என்பது வேறு. அ.தி.மு.க என்கிற கட்சியின்மீது விமர்சனம் செய்வது என்பது வேறு. விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்குக்கூட இந்த அரசின்மீது, கட்சியின்மீது விமர்சனம் உண்டு. அந்த விமர்சனத்தோடுதான் இந்தத் தோழமையைப் போற்றுகிறோம்; இந்த உறவைப் போற்றுக்கிறோம்; இந்த நட்பைப் போற்றுகிறோம்; இந்தக் கூட்டணியை உறுதிப்படுத்துகிறோம்.

சாதிக்கொடுமைகள் ஆங்காங்கே தலைவிரித்தாடுகின்றன. ஆணவக் கொலைகள் அதிகரித்திருக்கின்றன. இவற்றையெல்லாம் எதிர்க்கிறோம். ஆனால், அதற்காக வலதுசாரி அரசிலுக்கு இங்கே சிவப்புக்கம்பளம் விரிக்க முடியாது. வலதுசாரி அரசியலுக்குத் துணை போகக்கூடிய கும்பலை ஆதரித்துவிட முடியாது. ஒரு இடைக்காலத் தேவைக்காக அணிமாற முடியாது. இடதுசாரிகள் தெளிவாக இருக்கிறோம், துணிவாக இருக்கிறோம், இணைந்தே நிற்போம், கரங்களைக் கோர்த்துக் களமாடுவோம், வலதுசாரி அரசியலை வீழ்த்தும் வரை நாம் ஓய்ந்துவிடக் கூடாது, சோர்ந்துவிடக் கூடாது என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றிகூறி நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

நாடெங்கிலும் அதிகரிக்கும் கிறிஸ்தவர்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள்:

# சிறுபான்மையினருக்கு எதிரான சனாதனிகளின் வெறுப்பு அரசியலைக் கண்டித்து சனவரி 05, 2026 சிறுத்தைகள் ஆர்ப்பாட்டம்!

முனைவர் தொல்.திருமாவளவன்

திசம்பர் 25, 2025 கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாட்டத்தின்போது இந்தியாவின் வட மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் மீது சங்கப் பரிவாரத்தினர் நடத்திய வன்முறைத் தாக்குதல்களை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் மத சுதந்திரத்துக்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

ஒன்றிய அரசை பா.ஜ.க கைப்பற்றிய 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் மதச் சிறுபான்மையினர்மீது பல்வேறு விதமான வன்முறைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முஸ்லிம்கள் மட்டுமின்றி கிறிஸ்தவர்களும் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றனர். கிறிஸ்தவ மக்கள் குறிவைத்துத் தாக்கப்படுவது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. 2024ஆம் ஆண்டில் மட்டும் கிறிஸ்தவர்களின்மீது 834 தாக்குதல்கள் சங்கப் பரிவாரத்தினரால் நடத்தப்பட்டுள்ளன. பா.ஜ.க ஆட்சிக்கு வந்த 2014 ஆம் ஆண்டில் இந்தத் தாக்குதல்களின் எண்ணிக்கை வெறும் 139ஆக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தேவாலயங்களை எரித்தல்; மதமாற்றம் செய்ய முயற்சிக்கிறார்கள் என்ற பொய்யான புகார்களைச் சொல்லி கைது செய்தல்; கிறிஸ்தவ மத நிறுவனங்களுக்குச் சொந்தமான பள்ளிகள், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துதல்; கிறிஸ்தவ மதக்குருமார்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோர்மீது தாக்குதல் நடத்துதல் என இந்தத் தாக்குதல்கள் பலவகைப்பட்டவையாக உள்ளன. பாஜக ஆளும் மாநிலங்களில் இயற்றப்பட்டுள்ள மதமாற்றத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி கிறிஸ்தவ மதத்தினர் மற்றவர்களை மதமாற்ற முயற்சிக்கிறார்கள் என்ற பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவர்கள் மீது பொய் வழக்குகளைத் தொடுப்பதும் அதிகரித்து வருகிறது.

கிறிஸ்தவத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நன்கொடை பெறுவதற்கான அனுமதியை ரத்து செய்வது, அவர்கள்மீது வருமான வரித்துறை, அமலாக்கத்துறை முதலானவற்றை ஏவுவது ஆகியவையும் அதிகரித்து வருகிறது. இதன் உச்சகட்டமாக கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது கிறிஸ்தவர்கள் 80 க்கும் அதிகமான இடங்களில் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர். தேவாலயங்கள் தாக்கப்பட்டது மட்டுமின்றி கிறிஸ்துமஸ் தொடர்பான பொருட்களை விற்ற வணிகர்கள், பாதையோர வியாபாரிகள் உள்ளிட்டவர்களும் தாக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினருக்கு எதிராகக் கட்டமைப்பு ரீதியான தாக்குதல் பா.ஜ.க ஆட்சியில் அதிகரித்து வருகிறது. ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் சிறுபான்மை மக்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதியைக் குறைப்பது; சிறுபான்மை மதத்தைச் சார்ந்த மாணவர்களுக்கான

படிப்பு உதவி தொகைக்கான நிதியைக் குறைப்பது; அவர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை அழிப்பது என பா.ஜ.க அரசு செயல்பட்டு வருகிறது.

வழிபாட்டுச் சுதந்திரத்தை மறுப்பது; வழிபாட்டிடங்கள் பாதுகாப்புச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்வது முதலான நடவடிக்கைகளின் மூலமாக மதச்சிறுபான்மையினருக்கு இருக்கும் சட்டப் பாதுகாப்புகளை ஒவ்வொன்றாக பா.ஜ.க அரசு அழித்து வருகிறது. அவர்களைக் கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் முன்னேற விடாமல் தடுத்து முடக்குகிற வேலையைச் செய்து வருகிறது. அதன் உச்சகட்டமாகவே இன்று நேரடியான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதை சனநாயக சக்திகள் வேடிக்கை பார்க்க முடியாது.


மோடி அரசாங்கத்தின்கீழ் கிறிஸ்தவ மக்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதும், இத்தகைய மதவெறித் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த வேண்டியதும் இந்தியாவில் உள்ள மதச்சார்பற்ற சக்திகளின் கடமையாகும். இதை வெளிப்படுத்தும் விதமாக எதிர்வரும் 5ஆம் தேதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னையில் ஒருங்கிணைக்கப்படுகிறது. அதில் மதச்சார்பற்ற சக்திகள் திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று அறைகூவி அழைக்கிறோம்.

**அறிக்கை | 31.12.2025**

## 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்:



100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் - சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்தும் மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் 24.12.2025 அன்று சென்னையில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கண்டன உரையாற்றினார் எழுச்சித்தமிழர். இந்நிகழ்வில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, சிபிஐ(எம்) மேனாள் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எச்.ஜவஹிருல்லா, காங்கிரஸ் பேரியக்கத்தின் மேனாள் தலைவர் தங்கபாலு, பேரா.சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.




# திராவிடத்தால்தான் தமிழ் உயிர்ப்போடு இருக்கிறது!

## எழுச்சித்தமிழர் ஆவேசம்

**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் 'புரட்சிப்புயல்' வைகோ அவர்கள் திருச்சியில் இருந்து மதுரை வரை 'சமத்துவ நடைப்பயண'த்தை மேற்கொண்டார். திருச்சியில் 02.01.2026 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'சமத்துவ நடைப்பயணத்தைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

*தமிழ்ச்சொந்தங்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம். அண்ணன் வைகோ அவர்களை நான் 80களின் தொடக்கத்திலே மாணவப் பருவத்தில் கண்டு வியந்தவன். அவர் எங்கே உரையாற்றினாலும் அங்கே சென்று அவருடைய உரைகளைக் கேட்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் போர்ப்படைத் தளபதியாகக் களத்தில் அப்போது வலம் வந்தவர், களமாடியவர். அன்றைக்கு அவரிடம் கண்ட அதே வேகம்; அதே வீரியம் பல பத்தாண்டுகளைக் கடந்த நிலையிலும் இன்றும் நீடிக்கிறது என்பது பெரும் வியப்பைத் தருகிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்றுக்கொண்ட கொள்கையில் 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் விதைத்த சமத்துவக்கொள்கையில் இன்னும் உறுதிப்பாட்டோடு விளங்குகிறது என்பதற்குச் சான்றாக இந்தச் சமத்துவ நடைப்பயணம் விளங்குகிறது. அவருடைய கொள்கை உறுதிப்பாட்டின் ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.*

*திரு. செந்திலதிபன் அவர்கள் இங்கே அடுக்கினார். "1986லிருந்து 2018 வரையில் தொடர் நடைப்பயணங்கள் பத்துமுறை. இதுவரையில் தமிழ்நாட்டில் 6 ஆயிரம்*

கி.மீ நடைப்பயணம் மேற்கொண்ட பெருமைக்குரியவர்" என்பதை எடுத்துரைத்தார். அந்த நடைப்பயணங்கள் எல்லாம் வெவ்வேறு கோரிக்கைகளுக்கான நடைப்பயணங்களாக அமைந்திருந்தன. இந்த 11 வது நடைப்பயணம் தம்முடைய கொள்கை இலக்கை எடுத்துரைக்கக்கூடிய ஒரு நடைப்பயணமாக மிகவும் சிறப்புக்குரிய ஒரு நடைப்பயணமாக சனநாயக சக்திகள் அனைவரும் ஆதரிக்க வேண்டிய ஒரு நடைப்பயணமாக அமைந்திருப்பது போற்றுதலுக்குரியது; மகிழ்ச்சியளிக்கிறது. சொல்லப்போனால் சமத்துவத்திற்காகப் போராடக்கூடிய நாம் அனைவரும் அவரோடு இந்த நடைப்பயணத்தில் இணைந்து நடக்கவேண்டும். அத்தனை சிறப்புக்குரிய ஒரு நடைப்பயணம் இது.

பெரியார் இயக்கம் கண்டது சமத்துவத் திற்காகத்தான். பேரறிஞர் அண்ணா அரசியல் களத்தில் அடியெடுத்து வைத்ததும் சமத்துவத்திற்காகத்தான்; முத்தமிழறிஞர் கலைஞர் அரைநூற்றாண்டு காலம் இந்த மண்ணில் அரசியல் செய்ததும் சமத்துவத்திற்காகத்தான்; அவருடைய கருத்தியல் வாரிசாக இன்றைக்குக் களத்தில் நிற்கிற 'திராவிட மாடல்' என்கிற சமத்துவ ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற நம்முடைய தளபதி அவர்களும் இங்கே போராடிக்கொண்டிருப்பது சமத்துவத்திற்காகத்தான். மேடையில் அமர்ந்திருக்கிற அத்தனை தலைவர்களின் நோக்கமும், இங்கே கூடியிருக்கிற நம்முடைய அனைவரின் நோக்கமும் இறுதி இலக்கும் சமத்துவத்திற்காகத்தான்.

**சமத்துவத்திற்கான கூட்டணி**

நம்மையெல்லாம் மனிதர்களாய்த் தலைநிமிர வைத்த புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களும், 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார் அவர்களும் இந்த மண்ணில் தம் இறுதிமூச்சு வரையில் உரத்துப் பேசியதும், ஓடியாடிப் பணியாற்றியதும், தம் வாழ்வை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டதும் சமத்துவத்திற்காகத்தான். நம்முடைய கூட்டணி சமத்துவத்திற்கான கூட்டணி. ஆனால், நம்முடைய சமத்துவத்திற்கு எதிரான களத்தில் நிற்பவர்கள் சனாதன சக்திகள். பாகுபாடுகள் நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்பக்கூடியவர்கள். பிறப்பின் அடிப்படையில் உயர்வு–தாழ்வு நீடிக்கவேண்டும் என்று போராடிக் கொண்டிருப்பவர்கள். ஒருபுறம் சனாதன சக்திகள். இன்னொருபுறம் சனநாயகச் சக்திகள். சனநாயக சக்திகள்தான் இன்றைக்கு அண்ணன் தளபதியின் தலைமையில் ஒருங்கிணைந்து நிற்கிறோம். இந்தியாவிற்கு வழிகாட்டக்கூடிய ஒரு கூட்டணி அரசியலை தளபதி அவர்கள் இன்றைக்கு முன்னெடுத்து நடத்திக் கொண்டிருக்கிறார். மதச்சார்பின்மை, சகோதரத்துவம், சமத்துவம் என்பதுதான் இன்றைக்கு இந்தியா முழுவதும் நாம் பேசுகிற அரசியல். அந்த அரசியலுக்கு இன்றைக்குத் தலைமை வகிக்கக்கூடிய ஆற்றல் பெற்ற ஒரு தலைவராக நம்முடைய தளபதி இருப்பதால் இந்த நடைப்பயணத்தைத் தொடங்கி வைப்பதில் முழுப்பொறுப்பும், தகுதியும், ஆற்றலும், வலிமையும் அண்ணன் தளபதிக்கு உண்டு. அந்த வகையில், அண்ணன் வைகோ அவர்கள் தொடங்கி வைக்கிற இந்த நடைப்பயணத்தை அவர் தொடங்கிவைக்க வந்திருப்பது சாலப் பொருத்தமானது.

2026ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கிற சனாதனத்திற்கும் சமத்துவத்திற்கும் இடையிலான ஒரு யுத்தம்தான் வருகிற ஏப்ரல், மே மாதம் நாம் சந்திக்கப்போகிற யுத்தம். இது வழக்கமான தேர்தல் இல்லை. சராசரியான தேர்தல் இல்லை. தமிழ்நாட்டை ஆக்கிரமிக்கத் துடிக்கிற சனாதன சக்திகள் ஒருபுறம். அப்படி விட்டுவிட மாட்டோம்; நாங்கள் பெரியாரின் பிள்ளைகள்; அண்ணாவின் தம்பிகள்; அம்பேத்கரின் அரசியல் வாரிசுகள். தமிழ்மண்ணை அப்படி சனாதன சக்திகள் அப்படி ஆக்கிரமிப்பதற்கு ஒருபோதும் விடமாட்டோம் என்கிற உறுதிப்பாட்டோடுதான் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் நாம் அணிதிரண்டு நிற்கிறோம்.

**முகமூடிகளை அணிந்துகொண்டு திராவிடத்தைப் பேசக்கூடியவர்கள்**

வெளிப்படையாக சனாதன சக்திகள் ஒருபுறம் நிற்கிறார்கள் என்றால்,




**புரட்சிப்புயல் வைகோ அவர்களின் சமத்துவ நடைப்பயணத்தை தொடங்கிவைத்தார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**

அவர்களுக்குத் துணையாக பல்வேறு முகமூடிகளை அணிந்துகொண்டு திராவிடத்தைப் பேசக்கூடியவர்களாகவும், தமிழ்த்தேசியத்தைப் பேசக்கூடியவர்களாகவும் இன்றைக்கு நமக்கு எதிரான திரிபுவாத அரசியலைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரையும் ஒரே நேரத்தில், ஒரே களத்தில் எதிர்க்க வேண்டிய, எதிர்கொள்ள வேண்டிய பொறுப்பு நம் முன்னால் இருக்கிறது. அவர்களை வீழ்த்துவதற்கான வலிமை அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் அடங்கியிருக்கிறது. அதை நாம் உணர்ந்த நிலையில்தான், அண்ணன் வைகோ அவர்களாக இருந்தாலும் சரி, மேடையில் அமர்ந்திருக்கிற அத்தனை தலைவர்களும் சரி; நாம் கைகோர்த்து நிற்கிறோம்; உறுதிப்பாட்டோடு நிற்கிறோம்.

இன்றைக்கு நாம் தமிழ் என்று பேசுகிறோம் என்றால், அது திராவிடத்தால்தான் உயிர்ப்போடு இருக்கிறது. திராவிடம் என்பது தமிழ்த்தேசியத்திற்கு எதிரானதல்ல; தமிழுக்கு எதிரானதல்ல; தமிழனுக்கு எதிரானதல்ல; தமிழ்மண்ணுக்கு எதிரானதல்ல. இந்தித் திணிப்பைத் தடுத்தது திராவிடம். இந்தித் திணிப்பைத் தடுத்ததால்தான் தமிழ் இங்கே உயிர்ப்போடு வாழ்கிறது. இந்தித் திணிப்பைத் தடுத்த போராளியால்தான், தந்தை பெரியாரால்தான் தமிழ் இன்றைக்கு உயிர்ப்போடு இருக்கிறது. அதனால், தமிழ் என்றும் தமிழ்த்தேசியம் என்றும் நம்மால் பேசமுடிகிறது. பெரியார் போராடாமல் இருந்திருந்தால், அண்ணா போராடாமல் இருந்திருந்தால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போராடாமல் இருந்திருந்தால், திராவிடம் இந்தியைத் தடுக்காமல் இருந்திருந்தால், இன்றைக்கு நாம் எல்லோரும் இந்தி பேசக்கூடிய இந்திவாலாக்களாக மாறியிருப்போம். தமிழ்த் தேசியம் என்கிற சொல்லே பிறந்திருக்காது. இந்த 40 அல்லது 50 ஆண்டுகளில் தமிழ்நாடு இந்தி பேசும் மாநிலங்களுள் ஒன்றாக மாறியிருக்கும். தமிழ் மக்கள் இந்தி பேசும் மக்களாக மாறியிருப்பார்கள்.

### திராவிட நடைப்பயணம்

இன்றைக்கு தமிழ்நாட்டில் தமிழ் வாழ்கிறது என்றால், தமிழ் உணர்வு மேலோங்கியிருக்கிறது என்றால் தமிழ்த்தேசியம் என்கிற சிந்தனை வளர்ந்தோங்குகிறது என்று சொன்னால் அதற்கு அடித்தளம் வகுத்த, அடித்தளம் அமைத்த தலைவர் தந்தை பெரியார். அதைப் பரப்பியவர் பேரறிஞர் அண்ணா. அதைக் கட்டிக்காத்தவர்



முத்தமிழறிஞர் கலைஞர். அதை இன்றைக்கு முன்னெடுத்துச் செல்பவர் நம்முடைய தளபதி அவர்கள். ஆகவே, திராவிடம் என்பது சமூகநீதி, திராவிடம் என்பது சகோதரத்துவம், திராவிடம் என்பது சமத்துவம். எனவே, இந்தப் பயணம் 'திராவிட நடைப்பயணம்' என்று சொன்னாலும் பொருந்தும். 'சமத்துவ நடைப்பயணம்' என்று சொன்னாலும் பொருந்தும்.

**முத்தமிழறிஞர் கலைஞரால் வளர்த்தெடுக்கப்பட்டவர்**

அந்தத் திராவிட அரசியலைக் கட்டிக்காப்பாற்றக்கூடிய பாதுகாப்பு அரண்களுள் ஒன்றாகத் தமிழ்நாட்டில் விளங்குகிற ஒரு பேரியக்கம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கழகத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரால் வளர்த்தெடுக்கப்பட்டவர்; திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற பாசறையில் வளர்ந்தவர்; பெரியாரின் கொள்கைகளால் புடம்போடப்பட்டவர்; பேரறிஞர் அண்ணாவால் தட்டி வளர்க்கப்பெற்றவர் அண்ணன் 'புரட்சிப்புயல்' வைகோ அவர்கள். அதே பாசறையில் வளர்ந்தவர்தான் அண்ணன் தளபதி அவர்கள். ஆகவே, இவர்கள் முன்னெடுக்கிற இந்த முயற்சி தமிழ்மண்ணைக் காக்கும்; தமிழ் மக்களைக் காக்கும்; தமிழ்மொழியைக் காக்கும்; சமூகநீதியைக் காக்கும்; சமத்துவத்தை வென்றெடுக்கும் என்பதைச் சொல்லி, இந்த வாய்ப்பை வழங்கிய அண்ணன் வைகோ அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்தப் பயணம் வெல்ல வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

## பீமா கோரேகான் நினைவுநாள்: எழுச்சித்தமிழர் அஞ்சலி



**ஜனவரி 1, 1818 இல் மகாராஷ்டிரா மாநிலம் பூனா அருகே பீமா கோரேகானில் நடைபெற்ற போரில் பங்கேற்று வீரச்சாவடைந்த ஒடுக்கப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து 01.01.2026 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமையகமான சென்னை அம்பேத்கர் திடலில் வீரவணக்கம் செலுத்தினார் எழுச்சித்தமிழர். உடன் கட்சியின் முன்னணிப் பொறுப்பாளர்கள்.**



மாவீரர் நாள்
பொதுக்கூட்டம்

**சிறுத்தைகள் இருக்கும் வரையில் காவிகளின் கனவு பலிக்காது:**

# திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்றுவதா?


## எழுச்சித்தமிழர் ஆவேசம்


**மதுரை திருப்பரங்குன்றத்தில் மதவெறி பரப்பும் சனாதனக் கும்பலைக் கண்டித்து 22.12.2025 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

'திருப்பரங்குன்றம் தீபம்' – இந்தச் சிக்கல் குறித்து நாம் போராட்டம் நடத்துவோம் என்று அறிவிப்பு செய்தவுடன் சங்கிகளின் அடிவயிற்றில் புளி கரைத்துவிட்டது. உடனே எதிர்வினையாற்றுகிறார்கள். மனம்போன போக்கில் எனக்கு எதிரான அவதூறுகளை அள்ளி இறைக்கிறார்கள். 'வேங்கைவயல் பிரச்சினையில் திருமாவளவன் என்ன செய்தார்? திருப்பரங்குன்றம் வந்து ஏன் இவர் போராடத் துடிக்கிறார்? இவருக்கு என்ன தகுதி இருக்கிறது?' என்றெல்லாம் கேள்விகளை எழுப்புகிறார்கள். நான் இந்த மண்ணின் மைந்தன் என்பதே போதுமான தகுதி. தமிழ், தமிழ்மண், தமிழ்மக்கள் என்கிற அடிப்படையில் 40 ஆண்டுகாலமாக இந்தக் களத்தில் நின்று போராடக்கூடியவன் என்பதே எனக்கான தகுதி. பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து புரட்சியாளர்



அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை மார்க்ஸ் ஆகியோரின் கருத்துகளை உள்வாங்கியவன் என்கிற வகையில் சமூகநீதிக்காகக் குரல் கொடுக்கிறவன் என்பதே எனக்கான தகுதி. மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தக் கூடாது, சகோதரத்துவம் இந்த மண்ணில் தழைத்தோங்க வேண்டும். சமூக நல்லிணக்கம் இங்கே பெருகவேண்டும், மேலோங்க வேண்டும் என்கிற அடிப்படையில் தொடர்ந்து வாதாடிக் கொண்டிருப்பவன், போராடிக் கொண்டிருப்பவன் என்பதே எனக்கான தகுதி.

**ஆர்.எஸ்.எஸ் போராடியதா? பா.ச.க போராடியதா?**

மதுரையில் எத்தனையோ பிரச்சினைகள் உண்டு. தமிழ்நாட்டில் போராட வேண்டிய, வாதாட வேண்டிய பிரச்சினைகள் எத்தனையோ உள்ளன. ஏன் தி.மு.க அரசை எதிர்த்துப் போராட எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தியா முழுவதும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இந்துச் சமூகத்தைச் சார்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப் படுகிற கொடுமைகளைக் கண்டித்து என்றாவது ஒரு நாள் பா.ச.க.வைச் சார்ந்தவர்களோ, ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சார்ந்தவர்களோ, இந்து மக்கள் கட்சியைச் சார்ந்தவர்களோ, இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவர்களோ, அனுமந்த் சேனா அமைப்பைச் சார்ந்தவர்களோ போராடிய சான்றுகள் உண்டா?

மருத்துவத்துறையில் அகில இந்திய ஒதுக்கீடு 15 சதவிகிதம். அந்த ஒதுக்கீட்டில் எஸ்.சி., எஸ்.டி.க்கு இடஒதுக்கீடு உண்டு. ஓ.பி.சி.க்கு இடஒதுக்கீடு இல்லை. அதைக் கண்டுபிடித்து அவர்களுக்கும் இடஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று போராடிய இயக்கம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. ஆர்.எஸ்.எஸ் போராடியதா? பா.ச.க போராடியதா? அனுமந்த் சேனா போராடியதா? இந்து மக்கள் கட்சி போராடியதா? எங்கள் இந்து சகோதரர்களுக்கு அகில இந்திய ஒதுக்கீட்டில் இடஒதுக்கீடு வேண்டும் என்று போராடியதா?

தூய்மைப் பணியாளர்களின் பணிநிரந்தரத்திற்காகப் போராடினார்களா? செவிலியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்களே, அந்த செவிலியர்களுக்காகப் போராடி யிருக்கிறார்களா? ஓய்வூதிய முறையில் பழைய முறையை நடைமுறைப்படுத்துங்கள் என்று நாங்கள் சொல்கிறோம். வெட்கங்கெட்டவர்களே, என்றைக்காவது நீங்கள் அதைப் பற்றிப் பேசியிருக்கிறீர்களா?

**இது அதானி நாடா? இந்துக்களின் நாடா?**

மோடி ஆட்சிப்பொறுப்பேற்ற நாளிலிருந்து அரசாங்கச் சொத்துகளை யெல்லாம் அதானிக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் என்ன தேசியவாதம் பேசுகிறார்கள். நாட்டு சொத்துகளையெல்லாம் தனியாருக்கு விற்பனை செய்வதுதான் உங்கள் தேசியமயமாதலா? தனியார் மயப்படுத்துதல், கார்ப்பரேட் மயப்படுத்துதல். இதை என்றைக்காவது எதிர்த்து நீங்கள் பேசியிருக்கிறீர்களா? இந்த நாடு இந்துக்களின் நாடு என்று சொல்கிறீர்களே, இது அதானி நாடா? இந்துக்களின் நாடா? பதில் சொல்வீர்களா?

ஆர்.எஸ்.எஸ்., பா.ச.க.வினரால் முஸ்லிம்களுக்கு ஆபத்து இல்லை; கிறித்தவர்களுக்கு ஆபத்து இல்லை; அப்படி நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களை எதிரிகளாக நிறுத்தி பெரும்பான்மைவாதம் பேசி, ஆட்சியைத் தக்கவைத்து, ஒட்டுமொத்த தேசத்தையும் முதலாளிகளுக்கு கார்ப்பரேட்மயமாக்கிக் கொடுத்துவிட்டு, இந்துக்களை ஒட்டாண்டிகளாக்கி வீதியில் நிறுத்துவதுதான் பார்ப்பனக் கும்பலின், ஆர்.எஸ்.எஸ் கும்பலின் சதித்திட்டம். பாதிக்கப்படப்போவது இந்துக்கள்தான்.

**இந்துராஷ்டிரம் அல்ல; பார்ப்பனராஷ்டிரம்**

அவர்கள் இங்கே கட்டமைக்க விரும்புவது இந்துராஷ்டிரம் அல்ல; பார்ப்பன ராஷ்டிரம், பிராமண ராஷ்டிரம், சனாதன ராஜ்ஜியம். அதற்கு என்ன பொருள்? வர்ணாசிரம தர்மம் தான் இங்கே ஆட்சிநிர்வாக முறையாக இருக்கவேண்டும் என்பதுதான் பொருள். வர்ணாசிரம

முறையில் நீ யார்? அண்ணாமலை யார்? நயினார் நாகேந்திரன் யார்? எச்.ராஜா அந்தக் கும்பலைச் சார்ந்தவர்; அவருக்குப் பிரச்சினை இல்லை. ராஜா பேசுவதில் அர்த்தம் இருக்கிறது; அண்ணாமலை பேசுவதில் என்ன பொருள் இருக்கிறது? நயினார் நாகேந்திரன் பேசுவதில் என்ன பொருள் இருக்கிறது? யோசித்துப் பார்க்க வேண்டாமா; நீங்கள் யாருக்கு எதிராக நிற்கிறீர்கள் என்று. முருகன் என்கிறார், ஸ்கந்தன் என்கிறார், சுப்பிரமணியன் என்கிறார். நான் அண்ணாமலையைக் கேட்கிறேன், நயினார் நாகேந்திரனை கேட்கிறேன். எந்த பார்ப்பனராவது, ஒரேயொரு பார்ப்பனர் தன்னுடைய பிள்ளைக்கோ, பேரப்பிள்ளைக்கோ 'முருகன்' என்று பெயர் வைத்திருக்கிறாரா? ஏன் நீங்கள் முருகன் என்று பெயர் வைக்கத் தயங்குகிறீர்கள்? முருகன் என்று அவர்கள் ஒருபோதும் பெயர் வைக்கமாட்டார்கள்.

**முருகன் எப்படி ஸ்கந்தர் ஆனார்?**

முருகன் மலை எப்படி 'ஸ்கந்தர்' மலையாக முடியும்? அவர்கள் முருகனை 'ஸ்கந்தர்' என்கிறார்கள். ஸ்கந்தர் என்றால் என்ன அர்த்தம் என்றால், சுப்பிரமணியனுக்கு இன்னொரு பெயர் ஸ்கந்தர். சுப்பிரமணியன் என்றால் யார்? அது வடமொழிப் பெயர். 'சு பிரமணியம்' என்று பெயர் அதற்கு. பிரமணியம் என்றால் கடவுளுக்குத் தொண்டு செய்யக்கூடியவன். பிராமணர்களைப் பாதுகாக்கக்கூடியவன், பிராமணர்களுக்குரிய கடவுள். அவர் தமிழ்க்கடவுள், நீங்கள் சமஸ்கிருதத்தை தாய்மொழியாகக் கொண்டவர். உங்களுக்கும் அவருக்கும் என்ன உறவு? அந்த உறவைச் சொல்லுங்கள். எப்படி முருகன் ஸ்கந்தர் ஆனார்? எப்படி முருகன் சுப்பிரமணியன் ஆனார்? இதற்கு நயினார் நாகேந்திரனிடம் பதில் உண்டா? அண்ணாமலையிடம் பதில் உண்டா?

பெருவுடையார் கோயில் என்பது பெரிய கோயில். அதை 'பிரகதீஸ்வரர்' ஆலயம் என்று மாற்றிவிட்டார்கள். கோயிலை 'ஆலயம்' என்று மாற்றுகிறார்கள். 'கோயில்' என்பது தமிழ்ச்சொல். 'கோ' என்றால் அரசன் 'இல்' என்றால் அவர்கள் இருக்கின்ற இடம். 'இல்' என்றால் 'அரசு', 'கோ' என்றாலும் 'அரசு'. இறைவன் தங்கி மந்திரிகளோடு உரையாடக்கூடிய இடம் தான் கோயில்.

அந்தக் காலத்தில் சட்டமன்றம் கிடையாது. கோயிலில்தான் மன்னனும், மந்திரியும் அமர்ந்து பேசுவார்கள். அங்கே ஆயிரங்கால் மண்டபம் இருக்கும். அங்கேதான் ஆயுதக்கிடங்கு இருக்கும். அங்கேதான் மந்திரிகளோடு அமர்ந்து பேசுவார்கள். அரசன் அமரும் இடம் தான் கோயில். 'இறை' என்றாலும் 'அரசு'. 'இறைவன்' என்றாலும் 'அரசன்'. அவர்கள் இருக்கின்ற இடம்தான் கோயில். அதை இவர்கள் 'ஆலயம்' என்று மாற்றினார்கள். ஆகவே, முருகன் பெயரை 'ஸ்கந்தன்' என்றும் 'சுப்பிரமணியன்' என்றும் மாற்றியவர்கள் யார்? அவர்கள் எப்படி இதிலே உரிமை கொண்டாட முடியும்? இந்தியாவிலே தனித்துவத்தோடு இயங்குகிற நாடு எம் தமிழ்நாடு; நினைவில் வைத்தக்கொள்ளுங்கள். பீகாரில் உங்கள் ஆட்டம் எடுபடலாம், உத்தரப்பிரதேசத்தில் உங்கள் ஜம்பம் பலிக்கலாம். ஏன் கர்நாடகாவில்கூட நீங்கள் விரும்பியதைச் செய்ய முடியலாம். தமிழ்நாட்டில் உங்கள் ஜம்பம் பலிக்காது.

**திருப்பரங்குன்றம் அயோத்தியாக மாறுமா?**

இந்த இடத்தில் நின்று பேசியதாக வாஞ்சிநாதன் சொன்னார். நீதிமன்றம், யாரையும் எதிர்த்துப் பேசக்கூடாது என்று நிபந்தனைகள் விதித்த நிலையிலும்கூட 'திருப்பரங்குன்றம் அயோத்தியாக மாறும்' என்று பேசுகிறீர்கள் என்றால் அதற்கு என்ன பொருள்? யாரை மிரட்டுகிறீர்கள்? 'அயோத்தியில் பாபர் மசூதியை இடித்தது போல் இங்கே சிக்கந்தர் தர்காவை இடிப்போம்' அதுதான் அதற்குப் பொருள். 'தர்காவை இடம் மாற்றிக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இடித்துத் தகர்ப்போம்' என்பதுதானே அதற்குப் பொருள். சிறுத்தைகள் இருக்கிற வரையில் அதற்கு ஒருபோதும் இங்கே இடம் கொடுக்கமாட்டோம். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். "நாங்கள் ஓட்டுப் பொறுக்குவதற்காக பொதுவாழ்க்கைக்கு வந்தவர்கள் இல்லை. அவர்கள் என்ன நினைப்பார்கள், இவர்கள் என்ன

நினைப்பார்கள், நமக்கு ஓட்டு வருமா, வராதா? இப்படிப் பேசினால் நம்மை தி.மு.க கூட்டணியில் வைத்துக்கொள்வார்களா, வைத்துக்கொள்ள மாட்டார்களா? எனக்குக் கவலையில்லை. திருமாவளவனை உடன் வைத்திருந்தால் பிரச்சினை வரும் என்று நினைத்தால்கூட நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டாம். நாங்கள் மதநல்லிணக்கத்தை விரும்புகிறோம். சகோதர நல்லிணக்கத்தை விரும்புகிறோம். சிறுபான்மை மக்கள் என்று சொல்லக்கூடியவர்கள் யாரும் அந்நிய நாட்டைச் சார்ந்தவர்கள் இல்லை. அவர்கள் எங்கள் சொந்தங்கள். எங்களின் குருதிவழிச் சொந்தங்கள்.

**மதவெறியால் நிகழ்ந்த மரணம்**

எங்கள் தம்பி பூர்ணசந்திரனின் உயிரை நீங்கள் குடித்திருக்கிறீர்கள். அவன் இந்த மண்ணின் மைந்தன். அவனிடத்தில் நீங்கள் மதவெறியைத் தூண்டிவிட்டு, அவன் இன்றைக்கு உயிரிழக்கும் நிலை ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு? இந்த சங்பரிவார் கும்பல்தான் பொறுப்பு. மொழிக்காக உயிரிழந்தவர்கள் உண்டு; இனத்திற்காகத் தீக்குளித்தவர்கள் உண்டு. உலகத்தில் அப்படி நிகழ்ந்திருக்கின்றன. ஆனால், மதவெறியைத் தூண்டி இந்திய மண்ணில், இன்றைக்கு அதுவும் தமிழ் மண்ணில் இப்படியொரு உயிர்ப்பலியைக் கொடுத்து அதை வைத்து அரசியல் செய்யப் பார்த்தார்கள். நல்லவேளை; பூர்ணசந்திரனின் குடும்பம் விழிப்பாக இருந்தது. 'இந்த இடம் நீங்கள் அரசியல் செய்யவேண்டிய இடமில்லை; வெளியேறுங்கள்' என்று விரட்டியடித்திருக்கிறார்கள்.

உங்களைப் போல யாருக்கு எதிராகவும் நாங்கள் வெறுப்பு அரசியலைப் பேசவில்லை. நாங்கள் உங்களை விமர்சிக்கிறோம். பா.ச.க.வுக்கு எதிராக நாங்கள் வெறுப்பை உமிழவில்லை, வெறுப்பைக் கக்கவில்லை. நீங்கள் செய்கிற சதிகார அரசியலை அம்பலப்படுத்துகிறோம். இந்துக்களை ஏமாற்றுகிற முயற்சியை முறியடிக்கிறோம். சங்பரிவார்களின் திட்டத்தைத் தோலுரித்துக் காட்டுகிறோம்.

இந்தியா முழுவதும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், கையில் ஆட்சி இருக்கிற காரணத்தினால் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியா முழுவதும் எத்தனை மசூதிகள் இருக்கின்றன, அந்த மசூதிகளுக்கு எவ்வளவு சொத்துகள் இருக்கின்றன, வக்ஃபு வாரியத்தின் சொத்துகள் இந்தியா முழுவதும் எத்தனை இலட்சம் கோடிகள், இந்தியா முழுவதும் எவ்வளவு தேவாலயங்கள் இருக்கின்றன, அந்தத் தேவாலயத்திற்கான சொத்துகள் எவ்வளவு? தமிழ்நாட்டில் எவ்வளவு? இந்தியாவில் எவ்வளவு? எத்தனை பள்ளிகள் இருக்கின்றன? எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன? எத்தனை மருத்துவமனைகள் இருக்கின்றன? எத்தனை நிறுவனங்கள் இவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இதைக் கண்டுபிடிக்கிறார்கள், ஆய்வு செய்கிறார்கள். இதை ஆய்வு செய்வதற்கென்றே ஒரு குழுவை நியமித்திருக்கிறார்கள். இவை ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவார்கள் செய்கின்ற வேலை.

**அளவைக் கல்லில் தீபம் ஏற்றுவதுதான் பிரச்சினையா?**

நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் உள்ளன. அதுவெல்லாம் அவர்களுக்கு பிரச்சினையில்லை. அந்த அளவைக் கல்லில் தீபம் ஏற்றுவதுதான் இவர்களுக்கு மிகப்பெரிய பிரச்சினை. அங்கே தீபம் ஏற்றிவிட்டால் எல்லோருக்கும் கல்வி கிடைத்துவிடும். அங்கேதீபம் ஏற்றிவிட்டால் எல்லோருக்கும் சோறு கிடைத்துவிடும். அங்கே தீபம் ஏற்றிவிட்டால் எல்லோருக்கும் மனைப்பட்டா கிடைத்துவிடும். அங்கே தீபம் ஏற்றிவிட்டால் எய்ம்ஸ் கல்லூரி உடனே வந்துவிடும். அங்கே தீபம் ஏற்றிவிட்டால் எல்லோருக்கும் எல்லா வசதிகளும் கிடைத்துவிடும். அவர்களின் சிந்தனை எப்படியிருக்கிறது என்று பாருங்கள். அந்தக் கல் அளவைக் கல். அளவைக் கல் என்றால் நாயக்கர்கள் காலத்தில் ஊன்றப்பட்ட கல். அதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. தீபம் ஏற்றுகின்ற வரலாறு உண்டா என்றால் உண்டு. அது எங்கே என்றால், மலை உச்சியில் இருக்கின்ற பிள்ளையார் கோயில்



அருகே உள்ள ஒரு தூண். 400 ஆண்டுகளாக அந்தத் தூணில் தீபம் ஏற்றுவது வாடிக்கை. யாரும் மறுக்கவில்லை. அந்த மலை உச்சியில் சமணர்கள் வழிபாட்டுத்தலம் இருக்கிறது. இசுலாமியர்களின் பள்ளிவாசல் இருக்கிறது; தர்கா இருக்கிறது.

ஆகவே, திருப்பரங்குன்றம் மலையில் பள்ளிவாசல் இருக்கிறது, தர்கா இருக்கிறது, கீழே முருகன் கோயில் இருக்கிறது, மேலே விஸ்வநாதர் கோயில் இருக்கிறது, உச்சியில் பிள்ளையார் கோயில் இருக்கிறது, இது இல்லாமல் சமணர் குகையும் அங்கே இருக்கிறது. சமணர் வழிபாட்டுத்தலம் அங்கே இருக்கிறது. பலதரப்பட்ட மதநல்லிணக்கம் நிறைந்த ஒரு மலை திருப்பரங்குன்றம் மலை. இவ்வளவு நாட்கள் யாரும் சண்டை போட்டுக்கொள்ளவில்லை. இசுலாமியர்களும் அங்கே சென்றார்கள். இந்துக்களும் அங்கே சென்றார்கள். சமணர்கள் இப்போது யாரும் பெரிய அளவில் அங்கே செல்வது இல்லை. செல்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் அவையெல்லாம் பாதுகாக்கப்படுகின்றன, பராமரிக்கப்படுகின்றன.

அந்த மலையை 'சிக்கந்தர் மலை' என்று சொல்லக்கூடாது என்று சங்கிகள் சொல்கிறார்கள். சங்கிகள் எங்கெல்லாம் இருக்கிறார்கள்? நீதித்துறையிலும் இருக்கிறார்கள்; அதுதான் பிரச்சினை. சங்கிகள் எங்கெல்லாம் இருக்கிறார்கள்? காவல் துறையிலும் இருக்கிறார்கள். சங்கிகள் எங்கெல்லாம் இருக்கிறார்கள்? பேராசிரியர்களாகவும், துணைவேந்தர்களாகவும் இருக்கிறார்கள். சங்கிகள் எங்கெல்லாம் இருக்கிறார்கள்? உச்சநீதி மன்றத்திலும் இருக்கிறார்கள், உயர்நீதி மன்றத்திலும் இருக்கிறார்கள். மதுரைக் கிளையிலும் இருக்கிறார்கள். அதுவும் முருகன் பெயரை வைத்திருக்கிறார்கள். 'சுவாமிநாதன்' என்றால் முருகன் என்றுதான் அதற்குப் பெயர். அவர்கள் தீர்ப்பு எழுதுகிறார்கள். அது என்ன தீர்ப்பு? மக்கள் யாரும் எந்தப் பிரச்சினையையும் செய்யவில்லை. இசுலாமியர்களுக்கும் இந்துக்களுக்கும் திருப்பரங்குன்றத்தில் ஏதாவது மோதல் வெடித்ததா? ஏதாவது போராட்டம் நடந்ததா? ஏதாவது இரத்தக்களறி நடந்ததா? ஒன்றும் கிடையாது. ஒரு தம்பியை வைத்து வழக்குப் பதிவுசெய்து ஒரு தீர்ப்பு.

உடனே நாள் குறித்து தீர்ப்பு. நேரடியாகச் செல்கிறார் நீதிபதி. எத்தனையோ பிரச்சினைகள் இங்கே நடக்கின்றன. அங்கேயெல்லாம் நேராகச் செல்லவில்லை. தலித் மக்களுக்கு எதிராகக் கொடுமைகள் நடக்கிற எந்த இடத்திலும், ஆணவக் கொலைகள் நடக்கிற எந்த இடத்திலும் நீதிபதிகள் போய் நின்றதுண்டா? மாவட்ட ஆட்சித்தலைவர்கள் போய் பார்த்ததுண்டா? மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் போய் பார்த்ததுண்டா?

### ஆர்.எஸ்.எஸ்: இந்துக்களுக்காக உருவாக்கப் பட்ட அமைப்பு இல்லை

இன்றைக்கு ஆர்.எஸ்.எஸ்.ஸின் தேசியத் தலைவராக இருக்கிற மோகன் பகவத் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். இந்து அரசமைப்புச் சட்டத்தில் 1976இல் மிசாவுக்குப் பிறகுதான் 'மதச்சார்பின்மை' என்பது புகுத்தப்பட்டது. அதுதான் பிரச்சினை. பிரச்சினையின் மையமே அதுதான். ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பிராமணர்களால் உருவாக்கப்பட்டு, பிராமணர்களுக்கான இயக்கம். அது இந்துக்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு இல்லை. முதலில் அந்த அடிப்படையைப் புரிந்துகொள்ள வேண்டும். அண்ணாமலையே, நயினார் நாகேந்திரன் ஆகிய தோழர்களே, நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அக்கா தமிழிசை அவர்களே, நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அண்ணன் பொன்னார் அவர்களே,என்ன காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை நீங்கள் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லி நடிக்கிறீர்களே, உங்கள் தலைவர் மோடி புரட்சியாளர் அம்பேத்கரின் காலடியைத் தொட்டு வணங்குவதாக நாடகம் ஆடுகிறீர்களே, அம்பேத்கர் ஜெயந்தி கொண்டாடுகிறீர்களே, உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள், உள்ளத்தைத் தொட்டுச் சொல்லுங்கள், மனசாட்சியோடு சொல்லுங்கள் உண்மையா இது? அவர்மீது உங்களுக்கு நம்பிக்கை உண்டா? மதிப்பு உண்டா? அவரை ஏற்றுக்கொண்டவர்களா நீங்கள்? அப்படியென்றால் அவர் கண்ட கனவை நனவாக்குவதற்கு அல்லவா நீங்கள் போராடவேண்டும். அவர் என்ன விரும்பினார்? இந்தத் தேசம் மதச்சார்பற்ற தேசமாக இருக்கவேண்டும். இந்த அரசு மதச்சார்பற்ற அரசாக இருக்கவேண்டும். இந்த மண்ணில் எந்த மதத்தையும் யாரும் பின்பற்றலாம். அத்தனை மதங்களும் இங்கே வாழலாம். அந்த மதங்களைச் சார்ந்த அத்தனைபேரும் சகோதரத்துவத்துடன் வாழவேண்டும். இதுதானே அம்பேத்கர் கண்ட கனவு. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் கண்ட ஒரு சனநாயகக் குடியரசை, மதச்சார்பற்ற குடியரசை, ஒரு சோசியலிசக் குடியரசை நிறுவுவதுதானே புரட்சியாளர் அம்பேத்கர் கண்ட கனவு.

### இந்து தேசியம் அல்ல; பிராமணதேசியம்

ஒரு தம்பி கேட்கிறார், பெரியாரையும், அம்பேத்கரையும் ஒரே நேர்க்கோட்டில் வைக்க முடியுமா? நீ பெரியபுராணம் பாடுகிறாய்; அதனால், நான் பெரியார் புராணம் பாடுகிறேன். 'பிராமணக் கடப்பாரையைக் கொண்டு திராவிடக் கோட்டையை இடிப்பேன்'. அந்தத் தம்பிக்கு நான் சொல்கிறேன், நீங்கள் வெளிப்படையாக வந்துவிட்டீர்கள்; புலிக்குட்டி வெளியே வந்துவிட்டது. இவ்வளவு காலமாக நீங்கள் தமிழ்த்தேசியம் தான் பேசுகிறீர்கள் என்று நம்பிக்கொண்டிருந்தோம். இப்போதுதான் தெரிகிறது நீங்கள் இந்து தேசியம் பேசுகிறீர்கள் என்று தெரிகிறது. நீங்கள் இந்து தேசியம்கூட பேசவில்லை; பிராமணதேசியம் பேசுகிறீர்கள். கோல்வால்கர் தேசியம் பேசுகிறீர்கள். எவ்வளவு பெரிய ஒரு ஏமாற்று நடவடிக்கை அது. எது தமிழ்த்தேசியம்? பெரியாரை இழிவுபடுத்துவதும், பெரியாரின் அரசியலைத் தகர்ப்பதுமா தமிழ்த்தேசியம்?

இரண்டு பேர் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக் கொண்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். ஒரு தம்பி இன்றைக்கு



புதியதாக கட்சியைத் தொடங்கியிருக்கும் தம்பி. அவருக்கு ஒரேயொரு செயல்திட்டம் தான். ஒரே கட்சி; ஒரே செயல்திட்டம். ‘தி.மு.க ஒரு தீயசக்தி, தி.மு.க ஒரு தீயசக்தி’ என்பதுதான். நீங்கள் யார் என்பது தெரிந்துவிட்டது. நீங்கள் தமிழுக்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் போராடுவதற்காக கட்சியைத் தொடங்கவில்லை. தி.மு.க.வை வீழ்த்த நினைக்கிற ஆர்.எஸ்.எஸ்.க்கான கட்சியைத் தொடங்கியிருக்கிறீர்கள். இதுதான் உங்களின் செயல்திட்டம்.

**சீமானும், தம்பி விஜய்யும் ஆர்.எஸ்.எஸ் பெற்றெடுத்த பிள்ளைகள்**

நீங்கள் தி.மு.க.வை மட்டும் வீழ்த்துவதற்காகப் போராடவில்லை; பெரியார், அம்பேத்கர் பேசிய அரசியலையும் சேர்த்து வீழ்த்துவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். தம்பி சீமானும், தம்பி விஜய்யும் இன்றைக்கு ஆர்.எஸ். எஸ் பெற்றெடுத்த பிள்ளைகள் என்பது அம்பலமாகிவிட்டது. பா.ச.க.வின் பிள்ளைகள் என்பது அம்பலமாகிவிட்டது. பிரபாகரனின் பெயரைச்சொல்லி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிவிடலாம் என்றுகணக்குபோடவேண்டாம்என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். திருமாவளவனுக்கு பதவி ஆசை முக்கியமானதாக இருந்திருந்தால் ஒரு நடிகர், ஒரு ஹீரோ, அவருக்கு எதிர்காலம் இருக்கிறது, அவர் பின்னால் போகலாம் என்று போயிருப்பான் திருமாவளவன். அப்படியல்ல; எங்களுக்கு இரண்டு தொகுதியா, நான்கு தொகுதியா என்பது முக்கியமில்லை. நாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகோட்பாடுதான் முக்கியமானது. உங்களுக்கு அதில் உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அம்பேத்கரியம் நாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கை. அதில் முதன்மையானது மதச்சார்பின்மை.

**சமூகநீதி வேல்**

அந்த மதச்சார்பின்மைக்கு எதிரி ஆர்.எஸ்.எஸ்., மதச்சார்பின்மைக்கு எதிரி பா.ச.க., மதச்சார்பின்மைக்கு எதிரி சங்பரிவார்கள்., மதச்சார்பின்மைக்கு எதிரி என்றால் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரி என்று பொருள். மதச்சார்பின்மைக்கு எதிரி என்றால் புரட்சியாளர் அம்பேத்கருக்கு எதிரி என்று பொருள். எனவே, திருமாவளவன் எதிர்க்கிறான்.

எனவே, திருமாவளவன் திருப்பரங்குன்றத்திற்கு வந்திருக்கிறான். இங்கே சில தம்பிகள் வந்து முருகன் கையில் இருக்கும் வேல் கொடுத்தார்கள். உடனே நானும் முருகன் என்கிற நினைப்புக்கு போகின்ற ஆள் நான் கிடையாது அல்லது

முருகன் அருள் கிடைத்துவிடும் என்று நம்புகிறவன் கிடையாது. தம்பிகள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு கொண்டுவந்து கொடுக்கிறார்கள் அவ்வளவு தான். அது சமூகநீதி வேல். இந்த வேலாயுதத்தைக் கொண்டு சமூகநீதியைப் பாதுகாப்போம். அதுதான் நாங்கள் இந்த மேடையில் எடுத்துக்கொள்கிற உறுதி.

**கோல்வால்கரின் சிந்தனை**

ஆர்.எஸ்.எஸ்., பா.ச.க எதற்காக உருவாக் கப்பட்டது என்றால், இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால்தான் அவர்களின் காய் நகர்த்தல்களைப் புரிந்துகொள்ள முடியும். ஏன் அவர்கள் அடிப்படை உரிமைகளைப் பேசவில்லை? சாதிய முரண்களைப் பேசவில்லை? ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார உரிமைகள் குறித்துப் பேசவில்லை? கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பேசவில்லை? தொழில் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பேசவில்லை? ஏன் எந்த ஊருக்குச் சென்றாலும், கோயில் பிரச்சினையையும், சாமி பிரச்சினையையும் கையில் எடுக்கிறார்கள். இதற்குக் காரணம் கோல்வால்கரின் சிந்தனை, வீரசாவர்க்கரின் சிந்தனை.

அவர்கள் இங்கே இந்துக்களை சாதி அடிப்படையில் சாதி உணர்வையூட்டித் திரட்ட வேண்டும். ஒருவரிடம் குரானைப் பற்றிப் பேசினால், குரானின் அடிப்படையில் இசுலாமியர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து விடுவார்கள். பைபிளைப் பற்றிப் பேசினால் கிறித்தவர்கள் உலகம் முழுவதும் பைபிளின் அடிப்படையில் ஒன்றுசேர்வார்கள். ஆனால், இந்துக்களை எந்த வேதத்தைச் சொல்லி நீங்கள் ஒன்றுசேர்க்க முடியும்; சேர்க்க முடியாது. அவர்கள் சொல்கிற ஒரே வேதம் பகவத்கீதை தான்.

**இந்துமயமாகிவிட்ட பௌத்த அடையாளங்கள்**

பகவத்கீதையை சைவம் ஏற்றுக் கொண்டதா என்றால் ஏற்றுக் கொள்ள வில்லை; வைணவம்தான் ஏற்றுக் கொண்டது. இந்து மதம் என்று ஒன்று இல்லை. சைவம் தனியே இருந்தது, வைணவம் தனியே இருந்தது, சாக்தம் – சக்தி வழிபாடு தனியே இருந்தது, கௌமாரம் – குமாரன் வழிபாடு தனியே இருந்தது, காணபத்தியம் – கணபதி வழிபாடு தனியே இருந்தது, சௌரம் – சூரிய வழிபாடு தனியே இருந்தது. இவையெல்லாம் இந்தியாவில் இந்து மக்கள் என்று இன்றைக்கு சொல்லப்படுகின்ற இந்தச் சமூகத்தினர் கடைப்பிடித்த வழிபாட்டு முறைகள். இன்றைக்கு இந்துக்கள் பின்பற்றக்கூடிய எல்லா இலட்சினைகளும், கொடியும், காவியும், அவர்கள் பின்பற்றக்கூடிய பண்டிகை முறைகளும் ஒரு காலத்தில் பௌத்த பண்டிகைகளாக இருந்தன. பௌத்த இலட்சினைகளாக இருந்தன. பௌத்த துறவிகள் பின்பற்றியதுதான் காவி உடை. அது இன்றைக்கு இந்துமயமாகிவிட்டது; அது வேறு.

**அம்பேத்கரை அவர்களால் எதிர்க்க முடியவில்லை**

ஆகவே, மதச்சார்பின்மை என்பதுதான் அவர்களின் தொண்டையில் குத்திய முள். அம்பேத்கரை எதிர்க்கவும் முடியவில்லை; ஏற்கவும் முடியவில்லை. அம்பேத்கர் தான் இன்றைக்கு இந்திய அரசியலில் மையப்பொருளாக இருக்கிறார். அதை வெளிப்படையாக அவர்களால் பேச முடியாது. 30 அல்லது 35 கோடி மக்கள் எதிராகத் திரும்பிவிடுவார்கள். அதனால், அம்பேத்கருக்கு நினைவிடம்; அம்பேத்கருக்குச் சிலை; அம்பேத்கருக்கு சமாதி, அம்பேத்கருக்குக் கொண்டாட்டம்; இதையெல்லாம் செய்துகொண்டு அரசமைப்புச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்கிறார்கள்.

**அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது**

குடியுரிமைத் திருத்தச் சட்டம்; அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. அது முஸ்லிம்களுக்கு எதிரானது என்று பலரும் கருதுகிறார்கள்; இல்லை. வக்ஃபு திருத்தச் சட்டம் – அது முஸ்லிம்களின் மீது தொடுக்கப்படுகிற தாக்குதல்களாக இருந்தாலும் அது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. ஜம்மு–காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ஒழிப்புச் சட்டம் ஜம்மு–

காஷ்மீரை யூனியன் பிரதேசங்களாக உடைத்த சட்டம். அது முஸ்லிம்களுக்கு எதிரானதாகத் தோன்றும். ஆனால், அது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. முத்தலாக் சட்டம் ; அது முஸ்லிம்களுக்கு எதிரானதாகத் தோன்றும். ஆனால், அது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

**இறுதிமூச்சு வரையில் புரட்சியாளர் அம்பேத்கரின் கொள்கைகளுக்காகவே வாழ்ந்து மடிவேன்**

நான், பா.ச.க.வை ஆதரித்தால் என்னால் சமூகநீதியைப் பேசமுடியாது. பா.ச.க.வை ஆதரித்தால் என்னால் மதச் சார்பின்மையைப் பேசமுடியாது. நான் பா.ச.க.வை ஆதரித்தால் சமத்துவத்தைப் பேசமுடியாது. நான் பா.ச.க.வை ஆதரித்தால் சிறுபான்மை மக்களின் நலன்கள் குறித்துப் பேசமுடியாது. நான் பா.ச.க.வை ஆதரித்தால் கிறித்தவர்களோடும் இசுலாமியர்களோடும் நல்லிணக்கமாகக் கைகோர்க்க முடியாது. நான் பா.ச.க.வை ஆதரித்தால் சில இடங்கள் கிடைக்கலாம், தனிப்பட்ட முறையில் எனக்குப் பதவி கிடைக்கலாம். ராம்விலாஸ் பாஸ்வான் போலவும், ராம்தாஸ் அத்வாலே போலவும், எல்.முருகன் போலவும் நான் தனிப்பட்ட முறையில் பயன்பெற முடியும். ஆனால், என் சொந்த பந்தங்களோடு என்னால் உறவாட முடியாது. சிறுபான்மை மக்களோடு என்னால் அரசியல் செய்ய முடியாது. புரட்சியாளர் அம்பேத்கர் வகுத்தளித்த அரசியலை நான் உயர்த்திப்பேச முடியாது. “பதவி உண்டோ இல்லையோ இறுதிமூச்சு வரையில் புரட்சியாளர் அம்பேத்கரின் கொள்கைகளுக்காகவே வாழ்ந்து மடிந்தான் திருமாவளவன்; பெரியாரின் பிள்ளையாக வாழ்ந்து மடிந்தான் திருமாவளவன்” என்பதுதான் என் வாழ்க்கைச் செய்தியாக இருக்க வேண்டும். அதில் ஒருபோதும் தடம் மாறமாட்டான், வழுவமாட்டான், நழுவமாட்டான் திருமாவளவன்.

**இந்துக்களின் கோரிக்கை அல்ல; ஆர்.எஸ்.எஸ்.ஸின் செயல்திட்டம்**

திருப்பரங்குன்றம் பிரச்சினையை அவர்கள் கையிலெடுத்திருப்பதற்குக் காரணம் திருப்பரங்குன்றத்தில் வாழக்கூடிய இந்துக்களின் கோரிக்கை அல்ல; அது ஆர்.எஸ்.எஸ்.ஸின் செயல்திட்டம். இந்தியா முழுவதும் இருக்கிற தர்காக்களையும், மசூதிகளையும் அடையாளம் கண்டு பட்டியல் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் 175 இடங்களை அவர்கள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். இன்றைக்கு திருப்பரங்குன்றம், நாளை அவர்கள் எந்த ஊருக்குச் செல்வார்கள் என்று தெரியாது. எந்த நேரத்தில் அவர்கள் எதையும் செய்வார்கள். இதுதான் இங்கே இருக்கிற பிரச்சினை. ஆந்திராவில் 142 இடங்கள், அசாமில் 2 இடங்கள், பீகாரில் 77, டில்லியில் 72, டையூ டாமன் 1, குஜராத் 170, ஹரியானா 77, இமாச்சல் பிரதேசம் 1, கர்நாடாகா 192, காஷ்மீர் 52, கேரளா 2, லட்சதீவு 2, மத்திய பிரதேசம் 151, மகாராஷ்டிரா 143, ஒடிசா 12, பஞ்சாப் 14, ராஜஸ்தான் 170, தமிழ்நாட்டில் 175 இடங்கள். அதில் ஒன்றுதான் திருப்பரங்குன்றம். இது முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட ஒன்று.

**இந்துக்களை ஒன்றுசேர்க்கிற உத்தி**

ஏற்கெனவே, கோல்வால்கர் காலத்தில் இது முடிவெடுக்கப்பட்டது. எங்கெல்லாம் தர்காக்கள் இருக்கின்றனவோ அதையெல்லாம் கணக்கெடுங்கள். எங்கெல்லாம் தேவாலயங்கள் இருக்கின்றனவோ அதையெல்லாம் கணக்கெடுங்கள். அதனுடைய சொத்துகள் எவ்வளவு? அதையெல்லாம் கணக்கெடுங்கள். இதையெல்லாம் இந்துக்களிடம் போய் சொல்லுங்கள். அவர்களுக்கு எதிரான வெறுப்பைப் பரப்புங்கள். அப்போதுதான் இந்துக்களை ஒன்றுசேர்க்க முடியும். திருப்பரங்குன்றத்தில் இந்துக்கள் யாரும் பிரச்சினை செய்யவில்லை. முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் சண்டை இல்லை. இந்தத் தூண் தான் தீபம் ஏற்றிய தூண் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால், ஒருவரை வழக்குப் போட வைத்து, அவசர அவசரமாக விசாரித்து; தானே ஒரு விசாரணையை மேற்கொண்டு, ஆய்வை மேற்கொண்டு, ‘நானே நேரடியாகப் போகிறேன்’ என்று ஒரு தீர்ப்பை

எழுதுகிறார் ஒரு நீதிபதி. 'நடைமுறைப் படுத்துங்கள்' என்று ஆணையிடுகிறார் உள்ளூர் காவல்துறையினர். சி.ஐ.எஸ். எப் நீதிமன்றத்திற்கு காவலுக்கு வந்தவர் களை அங்கே அனுப்பிவைக்கிறார். இதுவெல்லாம் எவ்வளவு பெரிய அத்து மீறல் இது. சட்டமீறல் இது, மரபுமீறல் இது, அநீதி இது. எப்படி இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியும்?

**கார்த்திகை தீபம்**

400 ஆண்டுகளாக உச்சிப்பிள்ளையார் கோயில் அருகில் இருக்கிற தூணில் நாயக்கர் காலத்தில் கல்வெட்டுகளால் எழுதப்பட்ட அந்தத் தூணில் 'கார்த்திகை தீபம்' ஏற்றப்பட்டு வருவது வழக்கமாக இருந்துவருகிற ஒரு நடைமுறை, ஒரு மரபு. அதன்படி அறநிலையத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அந்த இடத்தில் 'கார்த்திகை தீபம்' ஏற்ற அனுமதித்தார்கள். நீங்கள் சொல்வது தர்காவுக்கு அருகில். அங்கே தனிப்பட்ட ஒரு பரப்பளவு இசுலாமியர்களுக்குச் சொந்தமானது. 1923 –24 அந்தக் காலகட்டத்தில் நடந்த வழக்கின் தீர்ப்பு உயர்நீதிமன்றம் வரையில் சென்ற தீர்ப்பு. முஸ்லிம்களின் பகுதி முஸ்லிம்களுக்கு, கோயில் தேவஸ்தானத்திற்கு உள்ள பகுதி தேவஸ்தானத்திற்கு; மீதமுள்ளது அரசுக்கு. ஒட்டுமொத்தக் கோயிலும் முஸ்லிம்களுக்கு இல்லை; ஒட்டுமொத்த மலையும் முஸ்லிம்களுக்கு இல்லை. ஒட்டுமொத்த நிலமும் இந்துக்களுக்கு இல்லை. அது இந்துக்கள், முஸ்லிம்கள் என்று பிரச்சினை இல்லை. அரசாங்கத்தை எதிர்த்து கோயில் நிர்வாகத்தைச் சார்ந்தவர்கள் வழக்குப் போடுகிறார்கள். அந்த வழக்கில் வந்த தீர்ப்பு. அதில் அவர்கள் சொன்ன தீர்ப்பு என்னவென்றால், எந்தப் பகுதியில் இதுவரையில் முஸ்லிம்கள் பயன்பாட்டில் வைத்திருந்தார்களோ, தர்கா இருக்கிற இடம், மசூதி இருக்கிற இடம், நடந்துபோகிற பாதை, நெல்லித்தோப்பு பகுதி, அந்த மண்டபம் இவையனைத்தும் இசுலாமியர்களுக்கானது.

**திருப்பரங்குன்றம் ஒரு அமைதியான இடம்**

அனைத்து மதத்தவரும் வழிபாடு செய்யக்கூடிய வழிபாட்டுத் தலங்களைக் கொண்ட இடம். இசுலாமியர்களும் இந்துக்களும் சகோதரத்துவத்தோடு நல்லிணக்கமாக வாழ்கிற ஒரு இடம். இந்த இடத்தை வன்முறைக்காடாக்க முயற்சிக்கிற சங்பரிவார் கும்பலுக்கு எச்சரிக்கை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உங்கள் அரசியலை தென்னிந்தியாவிற்கு வடக்கே வைத்துக்கொள்ளுங்கள். தென்னிந்தியா குறிப்பாக, தமிழ்நாடு முற்றிலும் மாறுபட்ட மண். சிறுத்தைகளின் அரசியல் மேலோங்கியிருக்கும் மண்.

நான் தி.மு.க கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்து பேசுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். அம்பேத்கரின் மாணவனாக, பெரியாரின் பிள்ளையாக, மார்க்சின் மாணவனாக இருந்து பேசுகிறேன். சமூக நல்லிணக்கத்தை விரும்புகிறவன் என்கிற முறையில் பேசுகிறேன். மதநல்லிணக்கத்தை நிறைவேற்றவேண்டும் என்கிற அடிப்படையில் நான் பேசுகிறேன். அவரவர் மதம் அவரவருக்கு. அவரவர் நம்பிக்கை அவரவருக்கு. அந்த நம்பிக்கைக்குள் யாரும் தலையிடக்கூடாது. இதுதான் எங்கள் வேட்கை; எங்கள் நிலைப்பாடு.

**மண்ணையும், மக்களையும் பாதுகாப்போம்**

அரசமைப்புச் சட்டத்தைச் சீர்குலைக் கக்கூடிய எந்த நடவடிக்கையையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம். அரசமைப்புச் சட்டம் முன்மொழியக்கூடிய கோட்பாடுகளைப் பாதுகாப்பதுதான் எங்களின் முதன்மை நிலைப்பாடு. அந்த அடிப்படையில்தான் திருப்பரங் குன்றத்திற்கு நாங்கள் வந்திருக்கிறோம்; சிறுத்தைகள் வந்திருக்கிறோம்; போராளிகள் வந்திருக்கிறோம்; மண்ணின் மைந்தர்கள் வந்திருக்கிறோம்; சமூகநீதிப் போராளிகள் வந்திருக்கிறோம்.

இந்த மண்ணையும், மக்களையும் பாது காப்போம். சனநாயக சக்திகளின் கைகளைக் கோர்த்துக் கொண்டு களமாடுவோம் என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றிகூறி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

## பீகார் மாநில கிறிஸ்துமஸ் மிலன் பெருவிழாவில் எழுச்சித்தமிழர்



பீகார் மாநிலம், டெஹ்ரி ஆன் சோன் என்னும் நகரில் 25.12.2025 அன்று டெஹ்ரி கிறிஸ்டியன் சர்ச் மற்றும் ஜெம்ஸ் ஆகிய அமைப்புகளின் நிறுவனர் சகோ.அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் மிலன் பெருவிழாவில் பங்கேற்று உரையாற்றினார் எழுச்சித்தமிழர். இவ்விழாவில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு.மனோஜ் குமார் அவர்களும் கலந்துகொண்டார்.

## வீதி விருதுகள் விழா - 2026




சென்னை முகப்பேர் பகுதியில் 04.01.2026 அன்று நடைபெற்ற பேராசிரியர் காளீஸ்வரனின் மாற்று ஊடக மையம் மற்றும் வேலம்மாள் மேல்நிலைப்பள்ளி இணைந்து நடத்திய 13ஆம் ஆண்டு ‘வீதி விழா’வில் கலந்துகொண்டு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார் எழுச்சித்தமிழர்.

## இரயில்வே அமைச்சரிடம் எழுச்சித்தமிழர் கோரிக்கை




இரயில்வே அமைச்சர் மாண்புமிகு அஷ்வினி வைஷ்ணவ் அவர்களை 17.12.2025 அன்று சந்தித்து சிதம்பரம் தொகுதிக்கான கீழ்க்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தினார் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தொல்.திருமாவளவன். “1.சிதம்பரம்: கோயம்புத்தூரிலிருந்து மயிலாடுதுறை வரை இயங்கும் ஜன் சதாப்தி விரைவு ரயிலை சிதம்பரம் வரை நீட்டிக்க வேண்டும். 2.பரங்கிப்பேட்டை : ரயில் எண் 20605/20606 மற்றும் விரைவு ரயில் எண் 16103/16104 ஆகியவை பரங்கிப்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும்.” என்பன அவை.

## திருமா அறிவியல் ஆய்வகக் கட்டடத் திறப்பு விழா



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் கூத்தவாக்கம் ஆர்.சி.புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளியில் 23.12.2025 அன்று ‘திருமா அறிவியல் ஆய்வகக்கட்டடத் திறப்பு விழா மற்றும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் விழா, கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தார் எழுச்சித்தமிழர். உடன் செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு.



**Thol. Thirumavalavan**
@thirumaofficial

டிசம்பர் 8

இன்று பிறந்தநாள் காணும் இளவல் பா.ரஞ்சித் அவர்களுக்கு எனது மனம் கனிந்த வாழ்த்துகள்.

திசம்பர் 28

வெள்ளந்தியான உள்ளம். வெளிப்படையான பேச்சு. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத் தெரியாத மழலையின் பாங்கு. எளியோரை நேசிக்கும் உயரிய மாண்பு. இவற்றின் அடையாளமே கேப்டன் விஜயகாந்த். தமிழ் மக்களின் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்ட பேராளுமை. இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அவர் நம்மோடு இல்லை என்பதை மனம் ஏற்கவில்லை. அவருக்கு எமது வீரவணக்கம்.

திசம்பர் 29

மதுரை மேலவளவில் அண்மையில் காலமான மேலவளவு முருகேசன் அவர்களின் தாயார் பாக்கியலெட்சுமி அவர்களது படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினேன். அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்

சனவரி 12

இன்று பவளவிழா காணும் ‘உச்சப் புகழின் ஒளிர்மிகு ஆளுமை’ @rajinikanth அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துகள். பெருமகிழ்வும் பேரமைதியும் நிறைந்த பெருவாழ்வு, நோய்நொடியின்றி நீடித்து நூறாண்டு காண நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

சனவரி 14

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று நடைபெற்ற திமுக தர்மபுரி மாவட்டச் செயலாளர் மேனாள் அமைச்சர் திரு.பழனியப்பன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினேன்!

சனவரி 15

தம்பி பண்ருட்டி ரமேஷ் அவர்களின் திடீர் மறைவு பெரும் அதிர்ச்சியளிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாகவே இருதய நோயினால் பாதிப்புக்குள்ளாகி சிகிச்சையிலிருந்தார். இன்று திடுமென நெஞ்சுவலி ஏற்பட்டு கடலூரில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆனால், சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்ததாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அவரது மகனைத் தொடர்பு கொண்டு துக்கம் விசாரித்தேன். ஆறுதல் கூறினேன்.

தம்பி ரமேஷூக்கு வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன். அவரை இழந்துவாடும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சனவரி 18

தம்பி இனியன் அவர்களின் நினைவு நாளில் அவரது கட்சி வளர்ச்சிப் பணிகளை நினைவு கூர்ந்து நன்றிப் பெருக்கோடு அவருக்கு எமது செம்மாந்த வீர வணக்கத்தைச் செலுத்துகிறோம்.

Owned & Published by Thol.Thirumaavalavan, Printed by E.Sudeesh Kumar.
Printed at Chennai Offset Printers, No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Published from L.I.G Flats, No. L - 12B, Ground Floor, Sarvamangala Colony, Ashok Nagar, Chennai - 600 083. Editor: THOL.THIRUMAAVALAVAN

# ஆளுநர் அளிக்கவுள்ள 'தேநீர் விருந்தில்' விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பங்கேற்காது!

**எழுச்சித்தமிழர் அறிவிப்பு**



**ச**ட்டமன்றத்தில் இன்று (20.01.2026) ஆளுநர் தனது கடமையை ஆற்றாமல் அவையிலிருந்து வெளியேறியிருப்பது அவரது வாடிக்கையான அணுகுமுறைதான். இதில் அதிர்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை. அவர் இப்பொறுப்பிலிருக்கும் வரை இத்தகைய அடாவடிகளைத் தொடரவே செய்வார். அதற்கு ஏதேனும் சாக்குபோக்குகளையும் சொல்வார்.

ஆளுநர் உரையில் என்ன இடம்பெற வேண்டுமென்பதை ஆளும் பீடத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள்தாம் முடிவு செயவர் என்பது காலம் காலமாக நடைமுறையிலிருந்து வரும் மரபாகும். ஆனால், இவர் தாம் விரும்புவதுபோல 'ஆளுநர் உரை' அமையவேண்டுமென எதிர்பார்க்கிறார். இது அவரது திட்டமிட்ட 'அவை மரபு' மீறலாகும். தொடர்ந்து சட்டப் பேரவையை அவமதிக்கும் அவரது இப்போக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

'தமிழ்த்தாய் வாழ்த்து' என்பது அவை நடவடிக்கைகளின் தொடக்கத்திலும் 'தேசிய கீதம்' என்பது அவை நிறைவிலும்தான் இசைக்கப்படும் என்பது அவருக்குத் தெரிந்த ஒன்று தான். எனினும், தொடக்கத்திலேயே ஏன் இசைக்கவில்லை என்பது குதர்க்கவாதம்.

இது தி.மு.க அரசுக்கு எதிரான திட்டமிட்ட உள்நோக்கம் கொண்ட அவதூறு ஆகும். சனாதன சக்திகளிடம் வலுப்பெற்றுள்ள 'திராவிடக் கருத்தியலுக்கு' எதிரான 'ஒவ்வாமையின்' வெளிப்பாடுதான் ஆளுநரின் இத்தகைய செயல் என்பதை தமிழ் மக்கள் உணரவேண்டும். இந்நிலையில், குடியரசு நாளையொட்டி ஆளுநர் அளிக்கவுள்ள வழக்கமான 'தேநீர் விருந்தில்' விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இந்த ஆண்டும் பங்கேற்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**எக்ஸ்தளப் பதிவு** | 20.01.2026

ISSN : 2581 5474
Date of Publication : First week of Every Month
Namadhu Thamizh Mann Tamil Monthly REGISTERED No. : TN/CC(S) DN/305/2024 - 2026
RNI No.: TNTAM/2006/19426  WPP No.TN/PMG (CCR) / WPP - 128 / 2024  - 2026
Posted at Egmore RMS / 1 Pathrika channel, Chennai - 8 / Posted between 3 - 9 of every month

